NATIONAL CHRISTIAN
EVANGELICAL ALLIANCE
SRI LANKA



# மதம் அல்லது

நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பான வழக்காடல் கைநூல்

மே 2021

வழக்கு கையேடு: மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம்

கொழும்பு, மே *2022*

பதிப்புரிமை © இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவம் (NCEASL)

வடிவமைப்பு: ஷெனால் ஜேசுடியன்

## அங்கீகாரங்கள்

இந்த கையேடு இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தினால் (NCEASL) பொறுப்பளிக்கப்பட்டதோடுஇ சட்டத்தரணிகளான கலாநிதி கெஹான் குணதிலக்கஇ எர்மிசா டெகல் மற்றும்மல்சிரினி டி சில்வா ஆகியோரால் தயாரிக்கப்பட்டது. சட்டத்தரணி லக்ஷான் டயஸ் மற்றும் யாமினி ரவீந்திரன்இ ஷலோமி டேனியல்இ ஜஷான் ஜெகசோதி மற்றும் நவிந்து மெண்டிஸ் ஆகியோரைக் கொண்ட NCEASL குழுவிடமிருந்து பெறப்பட்ட மதிப்பாய்வு மற்றும் கருத்துக்களுக்கு நாங்கள் நன்றி தெரிவிக்கிறோம்.

## உள்ளடக்கம்


அறிமுகம் ..... 5

*1.* மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறலொன்றை எவ்வாறு அடையாளம் காண்பது? ..... 9

*2.* பிரதான சட்ட ஏற்பாடுகள் ..... 11

*3.* வழக்கொன்றிற்கு தயாராவதற்கான வழிகாட்டல்கள் ..... 23

*4.* மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் தொடர்புடைய வழக்குகளுக்கான வழிநடத்தல் ..... 27

*5.* ஊடகங்களைக் கையாளுதல் ..... 51

பின்னிணைப்பு *1* ..... 53

## அறிமுகம்

*குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச பிரகடனத்தின் உறுப்புரை 18 ஆனது மத மற்றும் மதம் சாராத நம்பிக்கைகளுக்கான பரந்தளவான பாதுகாப்பினை அளிப்பதற்கு எத்தனிக்கின்றது. இந்த உரிமையானது, ''ஒருவர் தான் விரும்பும் ஒரு மதத்தை அல்லது நம்பிக்கையைக் கொண்டிருப்பதற்கான அல்லது ஏற்றுக்கொள்வதற்கான சுதந்திரம், தனித்தோ பிறருடன் கூட்டாகவோ பகிரங்கமான இடங்களிலோ அன்றேல் தனிப்பட்ட இடங்களிலோ தனது சமயத்தை அல்லது நம்பிக்கையை வழிபாட்டிலும், அனுசரிப்பிலும், வழக்கத்திலும், கற்பித்தலிலும் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம்'' என்பனவற்றைக் கொண்டிருக்க வேண்டுமென அது கூறுகின்றது. உறுப்புரை 18 இனால் வழங்கப்படுகின்ற இப்பாதுகாப்பானது ஆத்திகர்கள், கடவுளின் இருப்பு தொடர்பில் அமைதியைக் கடைபிடிப்பவர்கள், நாத்திகர்கள் மற்றும் எந்தவொரு மதத்தையோ அல்லது நம்பிக்கையினையோ கடைபிடிக்காதோர் என அனைவரையும் பாதுகாக்கின்றது.[1] இவ் உறுப்புரையானது இரண்டு கூறுகளைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது, (a) கழசரஅ வைெநசரெஅ (தெரிவின் அடிப்படையில் மதம் அல்லது நம்பிக்கையொன்றினைக் கொண்டிருப்பதற்கான, மாற்றுவதற்கான மற்றும் தழுவிக் கொள்வதற்கான உரிமை) மற்றும் (b) கழசரஅ நஒவநசரெஅ மதம் அல்லது நம்பிக்கையொன்றினை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம்).[2] அண்மையில் செய்யப்பட்டக் கற்கையொன்றின்படி, மத சிறுபான்மையினரின் மதம் அல்லது நம்பிக்கையினை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரமானது அச்சுறுத்தலொன்றாகப் பார்க்கப்படுகின்றது. உதாரணமாக, இக்கற்கையானது கடந்த நான்கு வருடங்களாக கிறிஸ்தவர்களுக்கு எதிராக செய்யப்பட்ட வன்முறை சம்பவங்களைப் பகுப்பாய்வு செய்திருந்தது என்பதுடன், அவற்றுள் 87 வீதமான உடற்சாரா வன்முறை சம்பவங்கள் 'பிரதானமாக வழிப்பாட்டிடங்கள் மற்றும் போதகர்களை இலக்கு வைத்து புரியப்பட்ட பாரபட்சமிக்க செயலாக அல்லது நடைமுறையாக அமைந்திருந்தன.'[3] அத்துடன் முஸ்லிம் சமுதாயமானது தொடரான கடுமையான வன்முறை சம்பவங்களையும் சந்தித்திருந்தது என்பதுடன், வடக்கு மற்றும் கிழக்கில் இடம்பெற்ற 'சிங்களமயமாக்கம்.'.பௌத்தமயமாக்கத்தினைத்' தொடர்ந்து இந்துக்களும் பாரபட்சத்தினை எதிர்கொண்டிருந்தனர்.[4]*

*இச்சம்பவங்களுள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான சம்பவங்கள் நீதிமன்றமொன்றின் முன்னிலையில் வழக்காடலுக்காக எடுத்துக்கொள்ளப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக உண்டு. மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் தொடர்புடைய வழக்குகள் பொதுவாக அவ்வகைப்பாட்டின்கீழ் வகைப்படுத்தப்படுவதில்லை. அவை அடிப்படை உரிமை மீறலுடன் தொடர்புடைய விடயங்களாக, ஆணை (ரிட்) மனுவொன்றாக, குற்றவியல் விடயமொன்றாக அல்லது பொது இடைஞ்சலை ஏற்படுத்திய விடயமொன்றாகவே வழக்காடப்படும்.*

*சட்டங்கள் தொடர்பில் காணப்படுகின்ற தாமதமானது நீண்ட காலமாயுள்ள மற்றும் திட்டவட்டமானதாயுள்ள பிரச்சினையொன்றாகும் என்பதுடன் இது இன்னமும் கையாளப்படாமலேயே இருக்கின்றது. தண்டனைச் சட்டக்கோவை மற்றும் குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவை என்பனவற்றைத் திருத்துவதற்காகத் தாபிக்கப்பட்ட விசேட குழுவின் 2017 ஆம் ஆண்டு அறிக்கையின்படி, குற்றவியல் விளக்கமொன்றினை நிறைவு செய்வதற்கு சுமாராக எடுக்கப்படுகின்ற நேரம் 10.2 வருடங்களாகும். மேன்முறையீட்டு செயன்முறையின்போது மேலும் ஏழு வருடங்கள் மேலதிகமாக செலவழிக்கப்படும். மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன தொடர்புடைய விளக்கங்கள் கீழ்நிலை நீதிமன்றங்களில் தசாப்தங்களாக நிலுவையிலிருக்கும். அவ்வப்போது, சம்பவம் இடம்பெற்று பல வருடங்களின் பின்னர் சாட்சிகள் சான்றளிப்பார்கள், வேறு பொருட்சார் ஆவணங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாம். கைமுறை வழக்கு செயன்முறையில் அதிகளவில் தங்கியிருத்தலானது சான்றுகள் சேதப்படுத்தல் அல்லது மாற்றுதல் ஆகியவற்றினால் இல்லாமற்போவதற்கும் வழிவகுக்கின்றது. இவை மதம் அல்லது*

[1] Office of the High Commissioner for Human Rights, 'Universal Declaration of Human Rights at 70: 30 Articles on 30 Articles – Article 18', at https://www.ohchr.org/en/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=23938&LangID=E.
[2] Human Rights Council, 'Report of the Special Rapporteur on freedom of religion or belief' (23 December 2015) UN DOC A/HRC/31/18.
[3] Verité Research and National Christian Evangelical Alliance Sri Lanka, 'Inaction and Impunity: Incidents of Religious Violence Targeting Christians, Muslims and Hindus, 2015-2019', at https://06c0dd8b-b6f3-41c4-99aa-25915d2024cf.filesusr.com/ugd/ff89a1_9c2ad191e3714fe491cf0ac1228452fc.pdf.
[4] ibid. p. 6.

நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறுதல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொள்ளக்கூடிய நிறுவனம்சார்ந்த சவால்களாகும். மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பான வழக்குகளில் ஈடுபடுகின்ற இலங்கை சட்டத்தரணிக்கு அத்தகைய மீறல்களை சரியான நேரத்தில் சவாலுக்குட்படுத்தல், சவாலுக்குட்படுத்த வேண்டிய தளத்தினைத் தெரிவு செய்தல் மற்றும் விளக்கத்திற்கு முன்னரான தயார்ப்படுத்தல் என்பன முக்கியமானவையாக அமைகின்றன.

இவ்வழக்காடல் கைநூலின் குறிக்கோள்களாவன: (a) மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் தொடர்புடைய தற்போதைய சட்டக் கட்டமைப்பு தொடர்பாகச் சட்டத்தரணிகளைப் பரீட்சயப்படுத்தல், மற்றும் (b) சட்டத்தரணிகள் தங்களுடைய வழக்குகளை மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் கட்டமைப்பிற்குள் அடையாளம் கண்டு அதற்கேற்ற வகையில் வழக்காடுவதற்கு உதவுதல்.

இக்கைநூலானது ஐந்து பிரிவுகளாக ஆக்கப்பட்டுள்ளது. முதலாவது பிரிவானது இக்கைநூலின் பரப்பினை விளக்குகின்றது, அதாவது மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பான வழக்கினை எது ஆக்குகின்றது என்பதனை விளக்குகின்றது. இரண்டாவது பிரிவானது சட்டக் கட்டமைப்பினை அடையாளப்படுத்துகின்றது, அதாவது, இலங்கையில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் தொடர்புடைய கட்டமைப்பில் ஏற்பாகவுள்ள பிரதான சட்ட ஏற்பாடுகளை உசாத்துணை நோக்கங்களுக்காக வழங்கியுள்ளது. மூன்றாவது பிரிவானது மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பான வழக்கில் சட்டத்தரணிகள் தங்களுடைய கட்சிக்காரர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு தயாராகின்றபோது கிடைக்கக்கூடியதாக உள்ளதா என ஆராய வேண்டிய மற்றும் பாதுகாக்க வேண்டிய தகவல்கள் மற்றும் சான்றுகளின் வகைப்பாடு தொடர்பான பொதுவான தயார்ப்படுத்தல் வழிகாட்டல்களை வழங்குகின்றது. நான்காம் பிரிவானது மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் தொடர்புடைய வழக்குகளின் குறிப்பிட்ட வகைப்பாடுகளை எவ்வாறு அறிந்து கொள்வது என்பது தொடர்பான வழிகாட்டல்களை சட்டத்தரணிகளுக்கு வழங்குகின்றது. இறுதி பிரிவானது குறிப்பிட்ட வழக்கொன்று தொடர்பாக ஊடகங்களுடன் எவ்வாறான ஊடாடலை செய்ய வேண்டுமென கூறுகின்றது.

## மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறலொன்றை எவ்வாறு அடையாளம் காண்பது?

## 1. மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறலொன்றை எவ்வாறு அடையாளம் காண்பது?

இக்கைநூலானது கீழ்வரும் கட்டளைவிதிகளை பூர்த்தி செய்கின்ற சந்தர்ப்பங்களில் எவ்வாறு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது தொடர்பாக வழிகாட்டும். இக்கட்டளைவிதியானது பொருத்தமான சர்வதேச மனித உரிமை நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது.[5]

அ. குறிப்பிட்ட சந்தர்ப்பமானது கீழ்வருவனவற்றுள் ஏதேனுமொரு பிரச்சினை தொடர்பானதாய் இருத்தல் வேண்டும்:

(1) மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் ஏதேனும் ஒரு அம்சம் மீறப்படுதல், **மற்றும்**
(2) மத அடையாளத்தின் அடிப்படையிலான பாரபட்சம், **அல்லது**
(3) மத அடையாளத்தின் அடிப்படையிலான வன்முறை.

(1) மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் அம்சங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கும்:

a) ஒருவரின் தெரிவின் அடிப்படையில் மதம் அல்லது நம்பிக்கையொன்றினைக் கொண்டிருப்பதற்கான அல்லது மாற்றிக்கொள்வதற்கான சுதந்திரம்.

b) வழிபாடு, அனுட்டிப்பு, நடைமுறை மற்றும் போதனை உள்ளடங்கலாக மதம் அல்லது நம்பிக்கையினை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம்.

தெளிவுபடுத்தும் நோக்கத்திற்காக, வழிபாடு, பின்பற்றல், நடைமுறை மற்றும் போதனை ஆகியவற்றிற்குள் உள்ளடங்கக்கூடிய நடவடிக்கைகளின் பட்டியலொன்று முறையே தரப்பட்டுள்ளது, எவ்வாறெனினும் இப்பட்டியல் அனைத்தையும் உள்ளடக்கிய முழுமையான பட்டியலல்ல.[6]

i. *வழிபாடு*: வழிபாட்டிடங்களைக் கட்டுதல், சடங்குசார் விதிகள் மற்றும் பொருட்களைப் பயன்படுத்தல், சின்னங்களைக் காட்சிப்படுத்தல், விடுமுறை மற்றும் ஓய்விற்கான நாட்களை அனுட்டித்தல் உள்ளடங்கலாக நம்பிக்கைக்கான நேரடி வெளிப்படுத்தல்களை வழங்குகின்ற சடங்கு மற்றும் சம்பிரதாய செயல்கள், அதேபோல அத்தகைய செயல்களுக்கு மையமாய் விளங்குகின்ற வேறுபட்ட நடைமுறைகள்.

ii. *அனுட்டிப்பு மற்றும் நடைமுறை*: இது சம்பிரதாய செயல்களை மாத்திரமல்லாது உணவுடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகளைப் பின்பற்றுதல், தனித்துவமான ஆடைகளை அல்லது தலைமறைப்புக்களை அணிதல், வாழ்வின் சில கட்டங்களுடன் ஒன்றித்திருக்கின்ற சடங்குகளில் பங்குகொள்ளல் மற்றும் குழுவான்றினால் பாரம்பரிய வழக்கமாகப் பின்பற்றப்பட்டு வந்த குறிப்பிட்ட மொழியொன்றினைப் பயன்படுத்தல் போன்ற சில வழக்காறுகளையும் உள்ளடக்கும்.

iii. *நடைமுறை மற்றும் போதனை:* தங்களுடைய மதத் தலைவர்களை, குருமாரை மற்றும் போதகர்களைத் தெரிவு செய்வதற்கான சுதந்திரம், மதப் பள்ளிகள்

[5] சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் உறுப்புரை 18, குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 18, மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினை அடிப்படையாகக் கொண்ட அனைத்து வடிவங்களிலுமான சகிப்புத்தன்மையின்மை மற்றும் பாரபட்சத்தினை இல்லாதொழிப்பதற்கான பிரகடனத்தின் உறுப்புரை 1, மனித உரிமைகள் தொடர்பான ஐரோப்பிய சமவாயத்தின் உறுப்புரை 9.
[6] UN Human Rights Committee, 'General Comment No 22 – Article 18 (Freedom of Thought, Conscience or Religion)' (30 July 1993), CCPR/C/21/Rev.1/Add.4, para 4.

மற்றும் மதப் பாடசாலைகளைத் தாபிப்பதற்கான சுதந்திரம் மற்றும் மத உரைப்பகுதிகள் அல்லது வெளியீடுகளைத் தயாரிப்பதற்கான மற்றும் வெளியிடுவதற்கான சுதந்திரம்.

குறிப்பிட்டு கூறத்தக்கவகையில், இக்கருத்தேற்புக்களுக்கிடையில் ஒன்றையொன்று இடைவெட்டும் தன்மை காணப்படுகின்றது, குறிப்பாக அனுட்டிப்பு மற்றும் நடைமுறை ஆகியவற்றுக்கிடையேயும் மற்றும் நடைமுறை மற்றும் போதனைக்கிடையேயும் இது அதிகமாகக் காணப்படுகின்றது.

*Karuwalagaswewa Vidanelage Swarna Manjula et al v. Pushpakumara, Officer-in-Charge, Police Station, Kekirawaetal* என்ற சமீபத்தைய வழக்கில் (யெகோவாவின் சாட்சிகள் என்ற வழக்கில்), [7] மதப் பரப்புகையானது அரசியலமைப்பின் உறுப்புரை 14(1)(உ) இன்கீழ் பாதுகாக்கப்பட்டுள்ள பரப்பிற்குள் உள்ளடங்காது என இலங்கை உச்ச நீதிமன்றம் தீர்த்தது.[8]

(2) **பாரபட்சமானது**, சமூக பொருளாதார பாரபட்சம் (உதாரணமாக, குறிப்பிட்ட சில பொருளாதார நடவடிக்கைகளை அல்லது சந்தைப் பங்குபற்றலைத் தடை செய்தல்), அரசியல் பாரபட்சம் (உதாரணமாக, பொது மக்கள் ஒன்று கூடல்களைத் தடை செய்தல்) மற்றும் சட்டத்தின் பிரயோகத்தில் பாரபட்சம் (உதாரணமாக, குற்றவியல் சட்டத்தினை பாரபட்சமானமுறையில் பிரயோகித்தல்) உள்ளடங்கலாக பல வகை பிரிவுகளை உள்ளடக்குகின்றது. குறிப்பிட்ட வழக்குடன் தொடர்புடைய பாரபட்சமான செயலானது நேரடியாக அல்லது மறைமுகமாக நபரொருவரின் அல்லது குழுவொன்றின் மத அடையாளத்தினை இலக்கு வைப்பதாய் இருத்தல் வேண்டும்.

(3) **வன்முறை என்பது** உடல்ரீதியான (உதாரணமாக, கொலைகள், தாக்குதல்கள் மற்றும் ஆதனச்சேதம்) அல்லது உடல்ரீதியற்ற (உதாரணமாக, அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல், பலவந்தப்படுத்தல்) செயல்களை உள்ளடக்கலாம். குறிப்பிட்ட வழக்குடன் தொடர்புடைய வன்முறை செயலானது நேரடியாக அல்லது மறைமுகமாக நபரொருவரின் அல்லது குழுவொன்றின் மத அடையாளத்தினை இலக்கு வைப்பதாய் இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட ஒரு மத அடையாளத்தினைக் கொண்டுள்ள நபர் மீது செய்யப்படுகின்ற, ஆனால் அம்மத அடையாளத்தின் காரணமாக செய்யப்படாத வன்முறையொன்று பொருத்தமானதாகக் கருதப்படமாட்டாது.

c) குறிப்பிட்ட வழக்கானது இலங்கை நீதிமன்றம் அல்லது நியாயசபையின் முன் இடம்பெற வேண்டும். வழக்குகள் குறிப்பாக இலங்கையிலுள்ள நீதிவான் நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது உச்சநீதிமன்றத்தில் இடம்பெறும்.

[7] SC (F.R) No. 241/14. See Gehan Gunatilleke, 'The Jehovah's Witnesses Case', (2020) 25 *The Bar Association Law Journal* 440.
[8] SC (F.R) No. 241/14. See Gehan Gunatilleke, 'The Jehovah's Witnesses Case', (2020) 25 *The Bar Association Law Journal* 440.

## 2. பிரதான சட்ட ஏற்பாடுகள்

இப்பிரிவானது இலங்கையில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் தொடர்புடைய அல்லது அத்தகைய சுதந்திரத்தில் சாத்தியமானவகையில் தாக்கத்தினை ஏற்படுத்தத்தக்க பிரதான சட்ட ஏற்பாடுகளை சுருக்கமாகக் கூறுகின்றது.

| சட்டம் | உறுப்புரை:. பிரிவு | பிரிவு (விபரமாக) |
|---|---|---|
| **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு** | உறுப்புரை 10 | ஆள் ஒவ்வொருவரும் தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை உடையவராய் இருத்தற்கான அல்லது மேற்கொள்ளுதற்கான சுதந்திரமுற்பட சிந்தனை செய்யும் சுதந்திரம், மனசாட்சியை பின்பற்றும் சுதந்திரம், மத சுதந்திரம் என்பவற்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.[9] |
| | உறுப்புரை 12 | உறுப்புரை 12(1) ஆனது, 'சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள் என்பதுடன் அவர்கள் சட்டத்தினால் சமமாக பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையவர்கள் ஆவார்" என கூறுகின்றது.<br><br>உறுப்புரை 12(2) ஆனது, "இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற்கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும் எந்த பிரசையும் ஓரங்காட்டுதலுக்கு உட்படுதலாகாது" என கூறுகின்றது.<br><br>உறுப்புரை 12(3) ஆனது, "எந்தவொரு நபரும்...மதத்தின் அடிப்படையில்...அவரது சொந்த வழிபாட்டிடம் தொடர்பாக...ஏதேனுமொரு இயலாமை, கடப்பாடு, மட்டுப்பாடு அல்லது நிபந்தனைக்கு உட்படுத்தப்படலாகாது." |
| | உறுப்புரை 14 (1) (உ) | ஒவ்வொரு பிரசையும் தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து பகிரங்கமாகவேனும் அந்தரங்கமாகவேனும் தனது மதத்தையோ அல்லது நம்பிக்கையையோ வழிபாட்டிலும், அனுசரிப்பிலும், நடைமுறையிலும் மற்றும் போதனையிலும் வெளிக்காட்டுவதற்கான சுதந்திரத்திற்கு உரித்துடையவர் ஆவார். |
| | உறுப்புரை 15 (7) | உறுப்புரை 12, 13(1), 13(2) மற்றும் 14 இல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மற்றும் அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளின் பிரயோகம் மற்றும் செயற்பாடு என்பன சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ள தேசிய பாதுகாப்பு மீதான அக்கறை, பொது ஒழுங்கு மற்றும் பொது சுகாதாரம் அல்லது ஒழுக்கத்தின் பாதுகாப்பு அல்லது ஏனையவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் அங்கீகாரம் மற்றும் கௌரவத்தினை பாதுகாக்கும் நோக்கங்கள் அல்லது ஜனநாயக சமூகத்தின் பொது |

[9] *Premalal Perera v. Weerasuriya* [1985] 2 Sri. L.R 177என்ற வழக்கில் உச்ச நீதிமன்றமானது மதச் சுதந்திரத்தினை முழுமையான உரிமையொன்றாக அங்கீகரித்தது. அதன் தீர்ப்பின் 192 ஆம் பக்கத்தில், 'மதத்திலிருந்து தோற்றம் பெற்றுள்ள நம்பிக்கைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. மத நம்பிக்கையொன்று பாதுகாக்கப்படுவதற்கு அது தர்க்கநியாயமுடையதாக, ஏற்றுக்கொள்ளக்கூடியதாக, நிலையானதாக அல்லது முழுமையானதாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. குறிப்பிட்ட விடயமானது மிகவும் மாறுபட்டதாக மற்றும் மதமல்லாத நோக்கமொன்றினை கொண்டிருந்தாலொழிய, பாதுகாப்பினை நாடுகின்ற நபர் அவருடைய மதத்தின் ஆணைகளைச் சரியாகப் பின்பற்றுகின்றாரா என்பதனை விசாரிப்பதற்கான நீதித் தகைமை நீதிமன்றங்களுக்கு இல்லை என்பதுடன் அது நீதிசார் செயற்பாடொன்றல்ல. நீதிமன்றங்கள் ஆன்மீக பொருட்கோடல் செய்யக்கூடிய நடுத்தீர்ப்பாளர்கள் அல்ல என்பதுடன் மத நம்பிக்கைகளை பரிசீலிக்கின்ற பணியினைப் பொறுப்பேற்றலுத் கூடாது' என நீதிமன்றம் கூறியது.

| | | |
|---|---|---|
| | | நலனுக்கான நியாயமானத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் நோக்கங்கள் போன்ற மட்டுப்பாடுகளுக்கு அமைவானதாகும். இந்நோக்கங்களுக்காக இப்பந்தியிலுள்ள "சட்டம்" என்பது பொது பாதுகாப்பு தொடர்பாக காலத்திற்கு காலம் சட்டத்தின்கீழ் விடுக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளையும் உள்ளடக்கும்." |
| | *உறுப்புரை 27* | *உறுப்புரை 27 (5)* இனக்கூட்டத்தினர், மதக்கூட்டத்தினர், மொழிக்கூட்டத்தினர் மற்றும் வேறு கூட்டத்தினர் உட்பட இலங்கையிலுள்ள எல்லா பிரிவினரான மக்களிடையேயும் ஒத்துழைப்பையும், பரஸ்பர நம்பிக்கையையும் வளர்ப்பதன்மூலம், அரசானது தேசிய ஐக்கியத்தைப் பலப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், ஓரங்காட்டுதலையும் பட்சபாதத்தையும் நீக்குவதற்கென போதித்தல், கல்வி ஊட்டல், தகவல் அறிவிப்பு ஆகிய துறைகளில் பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்தலும் வேண்டும்.<br><br>*உறுப்புரை 27 (6)* அரசானது இனம், மதம், மொழி, சாதி, பால் காரணமாக அல்லது அரசியல் அபிப்பிராயம் அல்லது தொழில் காரணமாக ஏதேனும் தகுதியீனத்துக்குட்படாத வண்ணம் பிரசைகளுக்குச் சமவாய்ப்புக்களை உறுதிப்படுத்தல் வேண்டும்.<br><br>*உறுப்புரை 27 (11)* பல்வேறு மத நம்பிக்கைகளைக் கொண்டுள்ள மக்கள் தத்தமது மதக் கோட்பாடுகளை மெய்யாக உணர்வதை இயலச் செய்வதற்கு அவசியமான பொருளாதார, சமூகச் சூழலை அரசானது உருவாக்குதல் வேண்டும். |
| ***1883 ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க தண்டனைக் கோவை கட்டளைச் சட்டம் (திருத்தப்பட்டவாறு)*** | *பிரிவு 290*<br><br>ஏதேனுமொரு பிரிவின் மதத்தினைப் புறக்கணிக்கின்ற எண்ணத்துடன் வழிபாட்டிடமொன்றினை ஊறுபடுத்தல் அல்லது தூய்மைகெடச் செய்தல். | ஏதேனுமொரு வழிபாட்டிடத்தினை, அல்லது ஏதேனுமொரு பிரிவினரால் புனிதமாகக் கருதப்படுகின்ற ஏதேனுமொரு பொருளை, அப்பிரிவில் உள்ள நபர்களின் மதத்தினைப் புறக்கணிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அல்லது அத்தகைய செயலை அப்பிரிவினைச் சேர்ந்த நபர்கள் தங்களுடைய மதத்திற்கான புறக்கணிப்பாகக் கருதுவார்கள் என்ற அறிவுடன் அதனை அழித்தல், சேதப்படுத்தல் அல்லது தூய்மைகெடச் செய்தல் இரண்டு வருடங்களுக்கு நீட்டிக்கப்படக்கூடிய இருவகையிலொருவகை சிறைதண்டனை அல்லது தண்டப்பணம் அல்லது அவ்விரண்டினாலும் தண்டிக்கப்படக்கூடிய குற்றமொன்றாகும். |
| | *பிரிவு 290 அ*<br><br>ஏதேனுமொரு பிரிவின் மதத்தினைப் புறக்கணிக்கின்ற எண்ணத்துடன் வழிபாட்டிடங்கள் தொடர்பாகச் செய்யப்படுகின்ற செயல்கள். | ஏதேனுமொரு வழிபாட்டிடத்தில் அல்லது ஏதேனுமொரு பிரிவினரால் புனிதமாகக் கருதப்படுகின்ற அல்லது பெருமதிப்பிற்குரியதாகக் கருதப்படுகின்ற ஏதேனுமொரு பொருளில், அல்லது அதன் மீது, அல்லது அதற்கு அருகாமையில், அப்பிரிவில் உள்ள நபர்களின் மத உணர்வுகளைக் காயப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் அல்லது அத்தகைய செயலால் அப்பிரிவினைச் சேர்ந்த நபர்களுடைய மத உணர்வுகள் காயப்படுத்தப்படும் என்ற அறிவுடன் ஏதேனுமொரு செயலைச் செய்தல் ஒரு வருடத்திற்கு |

| | | |
|---|---|---|
| | | நீட்டிக்கப்படக்கூடிய இருவகையிலொருவகை சிறைதண்டனை அல்லது தண்டப்பணம் அல்லது அவ்விரண்டினாலும் தண்டிக்கப்படக்கூடிய குற்றமொன்றாகும். |
| | பிரிவு 291<br><br>மத ஒன்றுகூடலொன்றிற்கு இடையூறு விளைவித்தல். | சட்டரீதியான முறையில் மத வழிபாட்டிற்காக அல்லது மத விழாக்களுக்காக ஒன்றுகூடியுள்ள ஒன்றுகூடல்களை வேண்டுமென்ற காரணங்களுக்காக இடையூறு செய்கின்ற எந்தவொரு நபரும் ஒரு வருடத்திற்கு நீட்டிக்கப்படக்கூடிய இருவகையிலொருவகை சிறைதண்டனை அல்லது தண்டப்பணம் அல்லது அவ்விரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும். |
| | பிரிவு 291 அ<br><br>மத உணர்வுகளைக் காயப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் சொற்களைப் பிரயோகித்தல். | எவரேனுமொரு நபருடைய மத உணர்வுகளைக் காயப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் அந்நபர் கேட்கக்கூடிய வகையில் ஏதேனும் சொற்களைச் சொல்கின்ற அல்லது சத்தங்களை எழுப்புகின்ற அல்லது அந்நபர் காணக்கூடியவகையில் ஏதேனும் சைகைகளைச் செய்கின்ற அல்லது அந்நபர் காணக்கூடியவகையில் ஏதேனுமொரு பொருளை வைக்கின்ற எந்தவொரு நபரும் ஒரு வருடத்திற்கு நீட்டிக்கப்படக்கூடிய இருவகையிலொருவகை சிறைதண்டனை அல்லது தண்டப்பணம் அல்லது அவ்விரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும். |
| | பிரிவு 291 ஆ<br><br>ஏதேனுமொரு பிரிவினரின் மதத்தினை அல்லது மத நம்பிக்கைகளைப் புறக்கணிப்பதனூடாக அப்பிரிவின் மத உணர்வுகளைக் கொந்தளிப்பாக்க வேண்டுமென்ற மற்றும் தீங்கான எண்ணத்துடன் புரியப்படுகின்ற செயல்கள். | ஏதேனுமொரு பிரிவின் மத உணர்வுகளைக் கொந்தளிப்பாக்க வேண்டுமென்ற மற்றும் தீங்கான எண்ணத்துடன், பேசப்பட்ட அல்லது எழுதப்பட்ட சொற்களால் அல்லது கட்புலனாகக்கூடிய காட்சிகளினால், அப்பிரிவின் மதத்தினை அல்லது மத நம்பிக்கைகளைப் புறக்கணிக்கின்ற அல்லது அவமதிக்கின்ற எந்தவொரு நபரும் இரண்டு வருடங்களுக்கு நீட்டிக்கப்படக்கூடிய இருவகையிலொருவகை சிறைதண்டனை அல்லது தண்டப்பணம் அல்லது அவ்விரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும். |
| | பிரிவு 292<br><br>மயானங்களில் அத்துமீறுதல். | எவரேனுமொரு நபரின் உணர்வுகளைக் காயப்படுத்த வேண்டுமென்ற அல்லது எவரேனுமொரு நபருடைய மதத்தினைப் புறக்கணிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அல்லது எவரேனுமொரு நபரின் உணர்வுகள் காயப்படுத்தப்படலாம் அல்லது எவரேனுமொரு நபருடைய மதம் புறக்கணிக்கப்படலாம் என்ற அறிவுடன் எவரேனுமொரு நபர் ஏதேனுமொரு வழிபாட்டிடம் அல்லது ஏதேனுமொரு கல்லறை அல்லது இறுதி கிரியைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் ஏதேனுமொரு இடம் அல்லது இறந்தவர்களின் எச்சங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடத்தில் அத்துமீறுகின்றமை, அல்லது ஏதேனுமொரு மனித சடலத்தினை அவமதிக்கின்றமை அல்லது இறுதிக் கிரியைகளுக்காக ஒன்றுகூடியிருக்கின்ற நபர்களுக்கு |

| | | |
|---|---|---|
| | | இடையூறு விளைவிக்கின்றமை ஒரு வருடத்திற்கு நீட்டிக்கப்படக்கூடிய இருவகையிலொருவகை சிறைதண்டனை அல்லது தண்டப்பணம் அல்லது அவ்விரண்டினாலும் தண்டிக்கப்படக்கூடிய குற்றமொன்றாகும். |
| | *பிரிவு 483*<br><br>குற்றவியல் அச்சுறுத்தல் | எவரேனுமொரு நபரை எச்சரிக்க வேண்டுமென்பதற்காக அந்நபருக்கு, அந்நபரின் புகழுக்கு அல்லது ஆதனத்திற்கு அல்லது அந்நபர் அக்கறைக் கொண்டுள்ள வேறொரு நபருக்கு அல்லது அவரது புகழுக்கு ஊறு விளைவிப்பதாக அச்சுறுத்துகின்ற, அல்லது அச்சுறுத்தலைத் தவிர்க்கும்பொருட்டு அந்நபர் சட்டரீதியாகச் செய்வதற்கு பிணிக்கப்படாத விடயமொன்றினைச் செய்யுமாறு சொல்கின்ற அல்லது அந்நபர் சட்டரீதியாகச் செய்வதற்கு பிணிக்கப்பட்டுள்ள விடயமொன்றினைச் செய்யாதிருக்கச் செய்கின்ற எந்தவொரு நபரும் குற்றவியல் அச்சுறுத்தல் குற்றத்தினைப் புரிந்தவர் ஆவார். |
| ***1865 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க, பொலிஸ் கட்டளைச்சட்டம் (திருத்தப்பட்டவாறு)*** | *பிரிவு 79(2)* | எவரேனுமொரு நபர் ஏதேனுமொரு பொது இடத்தில் அல்லது பொது கூட்டத்தில் சமாதானத்தை குலைக்கும் எண்ணத்துடன் அல்லது சமாதானம் குலைக்கப்படக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் அச்சுறுத்துகின்ற, தவறான அல்லது அவமதிக்கின்ற வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்துவாராயின் அல்லது அவ்வாறான நடத்தையினை வெளிப்படுத்துவாராயின் இப்பிரிவின்கீழ் குற்றமொன்றைப் புரிந்தவராவார். |
| ***1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை (திருத்தப்பட்டவாறு)*** | *பிரிவு 81* | நீதிவான் ஒருவர், ஆள் எவரும் அத்தகைய நீதிவான் நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாகச் சமாதானக் குலைவை ஏற்படுத்துவது சாத்தியம் என அல்லது சமாதானக் குலைவை அநேகமாக ஏற்படுத்தக்கூடியதான முறைகேடான செயல் ஒன்றைச் செய்வது சாத்தியம் என, அல்லது அத்தகைய எல்லைகளுக்கு வெளியேயுள்ள ஏதேனும் இடத்தில் சமாதானக் குலைவைப் புரியும் சாத்தியக்கூறுடைய அல்லது மேற்சொல்லப்பட்டவாறான ஏதேனும் முறைகேடான செயலைச் செய்யும் சாத்தியக்கூறுடைய ஓர் ஆள் அத்தகைய எல்லைகளுக்குள்ளாக இருக்கிறார் என எப்போதாயினும் தகவல் பெறும்போது, அந்த நீதிவான் இரண்டு ஆண்டுகளை விஞ்சாததும், அங்ஙனம் நிர்ணயிப்பது பொருத்தமானதென நீதிமன்றம் கருதுகின்றதுமான அத்தகைய காலத்திற்குச் சமாதானத்தைப் பேணுதற்கெனப் பிணைக்காரருடனோ அல்லது பிணைக்காரரின்றியோ முறியொன்றை எழுதி நிறைவேற்றுமாறு அவருக்கு கட்டளையிடக்கூடாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு அத்தகைய ஆளை, இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறைமையில், தேவைப்படுத்தலாம். |
| | *பிரிவு 98 (1)*<br><br>தொல்லையினை நீக்கவதற்கான நிபந்தனையுடனான கட்டளை | நீதிவானொருவர், ஓர் அறிக்கை அல்லது வேறு தகவல் கிடைக்கப் பெற்றதன் மீதும் அவர் பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய சான்று ஏதேனும் இருப்பின் அதனைப் பெறுவதன்மீதும் -<br>(அ) பொதுமக்களால் சட்டமுறையானதாகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக்கூடியதான |

| | | |
|---|---|---|
| | | ஏதேனும் வழியினின்றும், துறைமுகத்தினின்றும், ஏரியினின்றும், ஆற்றினின்றும் அல்லது வாய்க்காலினின்றும், அல்லது ஏதேனும் பொது இடத்திலிருந்து ஏதேனும் சட்ட விரோதமான தடக்கு அல்லது தொல்லை அகற்றப்படவேண்டும் என்று: அல்லது<br>(ஆ) சமுதாயத்தின் சுகாதாரத்திற்கு அல்லது உடனல வசதிக்கு ஊறு செய்கின்றது என்ற காரணத்தால் ஏதேனும் வியாபாரம் அல்லது தொழில், அல்லது எவையேனும் பண்டங்களை அல்லது வணிகப் பொருள்களை நிறுத்த வேண்டும் அல்லது அகற்றப்படுதல் வேண்டும் அல்லது தடை செய்யப்படுதல் வேண்டும் என்று: அல்லது<br>(இ) ஏதேனும் கட்டடத்தை அமைத்தல் அல்லது ஏதேனும் பதார்த்தத்தைக் கையாளுதல் பெருந்தீயை அல்லது வெடிவிபத்தை விளைவிக்கக்கூடுமாதலால், அது தவிர்க்கப்படுதல் வேண்டும் அல்லது நிறுத்தப்படுதல் வேண்டும் என்று: அல்லது<br>(ஈ) ஏதேனும் கட்டடம் அல்லது மரம் விழுந்துவிடும் சாத்தியம் கொண்டிருப்பதாகவும், அதனால் அயலில் வசிக்கின்ற அல்லது தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது அண்மையில் செல்கின்ற ஆட்களுக்கு ஊறு விளைவிக்கக் கூடியதான அத்தகைய ஒரு நிலையில் இருக்கின்றதாகவும், அதன் விளைவாக அதனை அகற்றுதல், பழுதுபார்த்தல் அல்லது அதற்கு ஆதாரம் கொடுத்தல் அவசியம் என்று: அல்லது<br>(உ) அத்தகைய ஏதேனும் வழியுடன் அல்லது பொது இடத்துடன் ஒட்டியதாயுள்ள ஏதேனும் கேணிக்கு, கிணற்றுக்கு அல்லது அகழிக்கு, பொதுமக்களுக்கு நேரக்கூடிய அபாயத்தைத் தடுக்கும் அத்தகைய விதத்தில், வேலியிடப்படுதல் வேண்டும் என்று,<br><br>எப்போதாயினும் கருதும்போது, அத்தகைய நீதிவான் அத்தகைய தடக்கினை அல்லது தொல்லையினை ஏற்படுத்தும், அல்லது அத்தகைய வியாபாரத்தை அல்லது தொழிலைக் கொண்டு நடாத்தும், அல்லது அத்தகைய எவையேனும் பண்டங்களை அல்லது வணிகப் பொருள்களை வைத்திருக்கும் அல்லது அத்தகைய கட்டடம், பதார்த்தம், மரம், கேணி, கிணறு அல்லது அகழி ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் ஆள், நிபந்தனையுடனான கட்டளையினால் நிருணயிக்கப்படற்பாலதான காலத்திற்குள்ளாக-<br><br>I. அத்தகைய தடக்கினை அல்லது தொல்லையினை அகற்ற வேண்டுமென: அல்லது<br>II. அத்தகைய வியாபாரத்தை அல்லது தொழிலை நிறுத்த வேண்டுமென அல்லது அகற்ற வேண்டுமென: அல்லது<br>III. அத்தகைய பண்டங்களை அல்லது வணிகப் பொருள்களை அகற்ற வேண்டுமென: அல்லது<br>IV. அத்தகைய கட்டடம் அமைக்கப்படுவதைத் தடுக்க வேண்டுமென அல்லது நிறுத்த வேண்டுமென: அல்லது<br>V. அதனை அகற்ற வேண்டுமென, பழுது பார்க்க வேண்டுமென, அல்லது அதற்கு ஆதாரம் கொடுக்க வேண்டுமென: அல்லது<br>VI. அத்தகைய பதார்த்தம் கையாளப்படும் முறையை மாற்ற வேண்டுமென: அல்லது |

| | | |
|---|---|---|
| | | VII. அத்தகைய மரத்தை அகற்ற வேண்டுமென: அல்லது<br>VIII. விடயத்திற்கேற்றாற்போல அத்தகைய கேணியினை, கிணற்றினை அல்லது அகழியினைச் சுற்றி வேலியடைக்கவேண்டுமென,<br><br>தேவைப்படுத்துகின்ற அத்தகைய நிபந்தனையுடனான கட்டளையினை ஆக்கலாம். |
| ***1970 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க, முதனிலை நீதிமன்றங்களின் நடபடிமுறைச் சட்டம் (திருத்தப்பட்டவாறு)*** | பிரிவு 66 *(1)*<br><br>(அமைதி குலைவிற்கான அபாயமுள்ளபோது அல்லது அபாயத்திற்கான சாத்தியமுள்ள சந்தர்ப்பங்களில் காணி முரண்பாடுகள் தொடர்பான விசாரணைகள் பற்றிய பகுதி ஏஐஐ இன் கீழ்) | அமைதி குலைவிற்கான அபாயமுள்ளபோது அல்லது அபாயத்திற்கான சாத்தியமுள்ள சந்தர்ப்பங்களில் காணி முரண்பாடொன்று எழுகின்றபோது-<br><br>(அ) அம்முரண்பாட்டினை விசாரிக்கின்ற பொலிஸ் அலுவலர்-<br>(i) குறித்த அம்முரண்பாடு தொடர்பானத் தகவல்களை அக்காணி அமைந்துள்ள நியாயாதிக்கத்தில் காணப்படுகின்ற முதனிலை நீதிமன்றத்தில் சாத்தியமானளவு விரைவாகப் பதிவு செய்ய வேண்டுமென்பதுடன் அவ்வாறு பதிவு செய்யப்பட்ட தினத்திற்கு பின்னர் நீதிமன்ற அமர்வுகள் இடம்பெறுகின்ற முதலாவது நாளில் அப்பிணக்கிற்குரிய திறத்தவர்கள் அப்பிணக்கு தொடர்பில் நீதிமன்றத்தின் முன்னிலையில் பிரசன்னமாவதனை உறுதிப்படுத்தி பிணை முறியொன்றினை செலுத்தல் வேண்டுமெனத் தேவைப்படுத்தல் வேண்டும்<br>அல்லது<br>(ii) அமைதியைக் காப்பதற்கு அவசியமானவிடத்து, பிணக்குடன் தொடர்புடைய திறத்தவர்களைச் சட்டத்திற்கு அமைவாகக் கைது செய்து குறிப்பிட்ட காணி அமைந்துள்ள நியாயாதிக்கத்தில் உள்ள முதனிலை நீதிமன்றமொன்றில் அவர்களை உனடியாக ஆஜர்படுத்தல் வேண்டுமென்பதுடன் அதேநேரத்தில் குறிப்பிட்ட பிணக்கு தொடர்பானத் தகவல்களை நீதிமன்றத்தில் பதிவு செய்தல் வேண்டும்<br>அல்லது<br>(ஆ) அப்பிணக்கிற்குரிய எவரேனுமொரு திறத்தவர் அப்பிணக்கு தொடர்பான நிகழ்வுகள் மற்றும் நாடுகின்ற நிவாரணம் என்பனவற்றையும் பிணக்கின் மற்றைய தரப்பினரின் பெயர்கள் மற்றும் விலாசங்களை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டும் சத்தியக் கடதாசியொன்றின் மூலமாக இத்தகவல்களை முதனிலை நீதிமன்றத்தில் பதிவு செய்யலாம். அப்போது நீதிமன்றமானது அதன் வழக்கமான செயன்முறையினூடாக அல்லது பதிவுத் தபாலினூடாக பெயரிடப்பட்டுள்ளத் திறத்தவர்களை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவிக்குமென்துடன், அத்தகைய ஆஜராக வேண்டிய திகதி தகவல்கள் பதிவு செய்யப்பட்ட தினத்திலிருந்து இரண்டு வாரங்களுக்கு பிந்தையதாக இருக்கக்கூடாது. |
| ***2007 ஆம் ஆண்டு 56 ஆம் இலக்க குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச் சட்டம்*** | பிரிவு *3(1)* | பிரிவினை, விரோதம் அல்லது வன்முறைக்கான தூண்டுதல்களை உருவாக்குகின்ற வகையில் எந்தவொரு நபரும் யுத்த பிரச்சாரம், தேசிய, இன அல்லது மத வெறுப்பு பிரச்சாரங்களை செய்தல் கூடாது. |

| | | |
|---|---|---|
| ***1979 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்*** | பிரிவு *2(1)(ஏ)* | ஒன்றில் சொல்லப்பட்ட அல்லது வாசிப்பதற்கென உத்தேசிக்கப்பட்ட சொற்களினால் அல்லது கட்புலனாகக்கூடிய குறிப்பீடுகளினால் அல்லது வேறு வகையில், வன்முறைச் செயல்களை அல்லது மத, இன அல்லது சமுதாய ஒற்றுமைக்கேடு அல்லது பகைமை உணர்வுகளை அல்லது வேறுபட்ட சமுதாயங்களுக்கிடையே அல்லது இன அல்லது மதக்குழுக்களுக்கிடையிலான விரோதச் செயல்களை புரிகின்ற அல்லது புரிவதற்கு எண்ணுகின்ற எவரேனுமொரு நபர்…. குற்றமொன்றினைப் புரிந்தவராதல் வேண்டும் |
| | பிரிவு *14(2)(அ)(ii)* | எந்தவொரு நபரும் தகைமைவாய்ந்த அதிகார சபையின் எழுத்துமூலமான அனுமதியின்றி வன்முறையினைத் தூண்டக்கூடிய அல்லது வேறுபட்ட சமுதாயங்கள் அல்லது இன அல்லது மதக் குழுக்களுக்கிடையே மத, இன அல்லது வகுப்புவாத ஒற்றுமையின்மை அல்லது சுமூகமற்ற உணர்வுகள் அல்லது விரோதங்களைத் தோற்றுவிக்கக்கூடிய விடயங்கள் தொடர்பாக எதனையும் எப்பத்திரிகையிலும் அச்சிடவோ அல்லது வெளியிடவோ கூடாது. |
| ***1991 ஆம் ஆண்டு 25 ஆம் இலக்க இலங்கை தொலைத் தொடர்புச் சட்டம்*** **(திருத்தப்பட்டவாறு)** | பிரிவு *5(ஊ)* | நான்காம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காக, அதிகாரி பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.<br><br>**(**ஊ) தேசிய பந்தோபஸ்து, பொது ஒழுங்கு மற்றும் நாட்டின் பாதுகாப்பு என்பவற்றின் நலன் கருதி, இலங்கை அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் அவருக்கு விடுக்கப்படக்கூடிய எவையேனும் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புக்களுக்கு இணங்கியொழுகுவதற்கு விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஒழுங்காக்கல் வழிவகைகளை எடுத்தல். |
| | பிரிவு *58*<br><br>கண்ணியமற்ற, ஒழுக்கக்கேடான, தேசத் துரோகமான தகவலை ஒலிகடத்துவதற்கான தண்டனை | ஒவ்வோர் ஆளும் தாமாகவோ அல்லது தமது முகவர் மூலமோ அல்லது சேவையாளர் மூலமோ கண்ணியமற்ற, ஒழுக்கக்கேடான, தேசத் துரோகமான, தூஷணமான, அச்சுறுத்துகின்ற அல்லது பாரிய தீங்கு விளைவிக்கும் தன்மைத்தான ஏதேனும் தகவலைத் தொலைத் தொடர்பு அலுவலகம் எதிலும் ஒலிக்கடத்துவதற்காக முன்வைத்தால் அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு இருவகையில் ஒரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும். |
| | பிரிவு *69* | ஏதேனும் பொது அவசரகால நிலைமை ஏற்பட்டதன் மீது அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு, அமைதி ஆகியவற்றின் நலன் கருதி, தொலைத்தொடர்பு |

| | | |
|---|---|---|
| | தொலைதொடர்பாடலின் பாவனையினை தடை செய்வதற்கான அல்லது மட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் அதிகாரம் | மூலமான தகவல்களை ஒலிக்கடத்துதலும் ஒலி வாங்குதலும் தடைசெய்யப்படுதல் அல்லது மேற்பார்வைக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமையவிருத்தல் உசிதமானதாகவிருப்பின் அல்லது அவசியமாகவிருப்பின், அமைச்சர், மேலேயுள்ள கருமங்கள் பற்றித் திருப்திப்படுத்துவதன்மேல், ஒன்றில் பொதுவாக ஆக்கப்பட்டு கசெற்றில் வெளியிடப்படும் அல்லது இலங்கையில் ஏதேனுமிடத்தில் அல்லது இலங்கையின் ஆட்புல நீர்ப்பரப்புகளில் உள்ள ஏதேனும் கப்பலில் அல்லது இலங்கையில் அல்லது இலங்கையின் மீதுள்ள அல்லது அதன் ஆட்புல நீர்ப்பரப்புகளில் அல்லது ஆட்புல நீர்ப்பரப்புகளின் மீதுள்ள ஏதேனும் வாகனத்தில் அல்லது வானூர்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் தொலைத்தொடர்புச் சேவை தொடர்பில் எழுத்தில் விசேடமாக ஆக்கப்படும் கட்டளை மூலம் -<br><br>**(அ)** தடைசெய்தல் உசிதமாக அல்லது அவசியமாக உள்ளவிடத்து, ஒன்றில் பொதுவாக அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட கப்பலில், வாகனத்தில் அல்லது வானூர்தியில் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட தொலைத்தொடர்பினால் அல்லது இயக்குநரொருவரினால் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஆளினால் அல்லது வகுப்பினரான ஆட்களினால் தொலைத்தொடர்பு மூலம் தகவல்கள் ஒலிக்கடத்தப்படுவதை அல்லது ஒலிவாங்கப்படுவதைத் தடைசெய்யலாம்; அல்லது<br><br>**(ஆ)** மேற்பார்வையும் கட்டுப்பாடும் உசிதமாக அல்லது அவசியமாக உள்ளவிடத்து –<br><br>**(I)** ஒன்றில் பொதுவாக அல்லது இயக்குநரினால் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட தொலைத்தொடர்புச் சேவைக்குப் பொறுப்பாகவுள்ள ஆளினால் தொலைத்தொடர்பு மூலம் தகவல்கள் எந்த நிபந்தனைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அமைய ஒலிகடத்தப்படக்கூடுமோ அல்லது ஒலிவாங்கப்படக்கூடுமோ அந்த நிபந்தனைகளையும் மட்டுப்பாடுகளையும் விதித்துரைக்கலாம்; அத்துடன்<br><br>**(II)** தொலைத்தொடர்பு மூலம் ஒலிக்கடத்தப்படுவதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட, அல்லது தொலைத் தொடர்பு மூலம் ஒலிகடத்தப்பட்ட அல்லது ஒலிவாங்கப்பட்ட எல்லா வகுப்பினவான அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வகுப்பினவான அல்லது ஜிவரத்திணவான தகவல்களை இடையீடு செய்வதற்கு அல்லது தணிக்கை செய்வதற்கு அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய ஏற்பாட்டைச் செய்யலாம். |
| ***2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணிணிவழிக் குற்றச் சட்டம்*** | பிரிவு *6(1)* | அத்தகைய பணி-<br>(அ) தேசிய பொருளாதாரத்திற்கு<br>(ஆ) தேசிய பாதுகாப்பிற்கு அல்லது<br>(இ) பொதுமக்கள் பாதுகாப்பிற்கு<br><br>ஆபத்தை அல்லது உடனிகழக்கூடிய ஆபத்தை விளைவிக்குமென அறிந்துகொண்டு அல்லது நம்புவதற்கு காரணமாயிருந்த உளக்கருத்துடன் கணிணியொன்றைக் கொண்டு ஏதேனும் அத்தகையப் பணியைச் செய்ய வைக்கும் எவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்தாண்டுகளை |

| | | |
|---|---|---|
| | | விஞ்சாதக் காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகை மறியற்தண்டணையினால் தண்டிக்கப்படலும் வேண்டும். |
| ***1973 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை பேரவை சட்டம் (திருத்தப்பட்டவாறு)*** | பிரிவு *15* | *(1)* (அ) ஏதேனும் ஒழுக்கக்கேடான விடயத்தினை, அல்லது<br>(ஆ) *நீக்கப்பட்டுவிட்டது.*<br>(இ) பொது ஒழுக்கத்திற்கு ஊறு விளைவிப்பதாக எண்ணப்படுகின்ற ஏதேனும் விளம்பரத்தினை, அல்லது<br>(ஈ) ஏதேனும் நாகரீகமற்ற அல்லது ஆபாசமான அறிக்கை அல்லது விடயத்தினை<br>ஏதேனும் செய்திப்பத்திரிகையில் வெளியிடுகின்ற அல்லது வெளியிடுவதற்கு காரணமாய் அமைந்த ஒவ்வொரு நபரும் குற்றமொன்றைப் புரிந்தவராதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐயாயிரம் ரூபாய்க்கு மேற்படாத தண்டப்பணத்திற்கு அல்லது இரண்டு வருடங்களுக்கு மேற்படாத இருவகையிலொருவகையான சிறைத்தண்டணைக்கு அல்லது அத்தகைய தண்டப்பணம் மற்றும் சிறைதண்டனை ஆகிய இரண்டிற்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.<br><br>*(2)* இப்பிரிவின் நோக்கத்திற்காக:<br>(அ) 'ஒழுக்கக்கேடற்ற விடயம்' என்பது-<br>(i) ஏதேனும் மதமொன்றை அல்லது ஏதேனும் மதமொன்றின் தாபகரை,<br>(ii) ஏதேனும் மதமொன்றினைப் பின்பற்றுபவர்களினால் பெருமதிப்பிற்குரியதாகக் கருதப்படுகின்ற ஏதேனும் தெய்வம் அல்லது புனிதரை<br>அவமதிப்பதனை நோக்கமாகக் கொண்ட எவ்விடயத்தினையும் குறிக்கும்.<br>(ஆ) 'நாகரீகமற்ற அல்லது ஆபாசமான அறிக்கை அல்லது விடயம்' என்பது அனைத்து பொருத்தமான சந்தர்ப்பங்களையும் கவனத்திற்கொண்டு பார்க்கின்றபோது அவ்வறிக்கை அல்லது விடயத்தினை வாசிக்கின்ற அல்லது பார்க்கக்கூடிய நபர்களை ஒழுக்கம்கெடச் செய்கின்ற அல்லது மோசமானதாக்குகின்ற எந்தவொரு அறிக்கை அல்லது விடயத்தினையும் குறிக்கும். |
| ***1985 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க சுடுகாடு மற்றும் இடுகாடுகள் கட்டளைச்சட்டம்*** | பிரிவு *9* | அடக்கம் செய்வதற்கான அல்லது தகனம் செய்வதற்கான சிறு தேவாலயமொன்றை (ஊாயிநட) அல்லது வேறு ஏதேனுமொரு கட்டிடமொன்றை இடுகாட்டின் எல்லைகளுக்குள் கட்டுவதற்கு பொருத்தமான அதிகார சபை அனுமதி வழங்க இயலும். |
| | பிரிவு *11* | *(1)* ஒரு மதப் பிரிவொன்று இடுகாட்டின் ஒரு பகுதியினை விசேட நோக்கமொன்றிற்காகத் தமக்குத் தருமாறு கோரிக்கை விடுக்குமிடத்து பொருத்தமான அதிகார சபையானது இடுகாட்டின் ஒரு பகுதியினை குறிப்பிட்ட மத பிரிவிற்கு விற்பதற்கு இயலும். அவ்வாறு விற்கப்பட்ட பகுதியானது இக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக மாத்திரம், பொருத்தமான அதிகார சபையினால் நம்பிக்கையின் அடிப்படையில் |

| | | |
|---|---|---|
| | | நிறைவேற்றப்பட்ட உறுதியொன்றின் மூலமாக மாற்றியளிக்கப்பட்ட அல்லது மாற்றியளிக்கப்படவுள்ள குறிப்பிட்ட மத பிரிவினருக்கு உரித்தானதாகக் கருதப்படும்.<br><br>(2) நம்பிக்கையாளராக அல்லது நம்பிக்கையாளர்களாக செயற்படுகின்ற அத்தகைய நபர் அல்லது நபர்கள் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களை உள்ளடக்கிய முகாமையாளர் சபையொன்றினை காலத்திற்கு காலம் நியமித்தலும், அத்தகைய சபை அல்லது அவ் அங்கத்தவர்களுள் பெரும்பான்மையானோர் அவ்விடம் தொடர்பாக கீழ்வரும் அதிகாரங்களை பிரயோகித்தலும் சட்டபூர்வமானதாய் இருத்தல் வேண்டும்:<br><br>(அ) பராமரிப்பாளரொருவர், கல்லறை தோண்டுபவர்கள் மற்றும் அவ்விடுகாட்டின் பராமரிப்பு மற்றும் பாவனைக்கு அவசியமான ஏனைய பணியாளர்களை நியமிப்பப்பதற்கான அதிகாரம் (ஆ) அவ்விடத்திலுள்ள ஏதேனும் நிலத் துண்டு அல்லது துண்டுகளில் அடக்கம் செய்வதற்கான பிரத்தியேக உரிமை அல்லது அங்கு ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட அடக்கங்களைச் செய்வதற்கான உரிமை அல்லது எந்தவொரு கல்லறையின் மேலும் ஏதேனும் நினைவுச்சின்னம் அல்லது கல்லறைச் சின்னம் அமைப்பதற்கான உரிமை அல்லது அவ்விடத்திலுள்ள ஏதேனும் சிறு தேவாலயப் பகுதி அல்லது கட்டிடங்களின் சுவர்களில் எழுதுபலகை அல்லது நினைவறிக்கைகளை இடுவதற்கான உரிமை என்பவற்றை வழங்குவதற்கான அதிகாரம் (இ) அவ்விடத்தினுள் சடலங்களைத் தகனம் செய்வதனைத் தடை செய்வதற்கான அதிகாரம். |
| | பிரிவு 13 | பரிசுத்த ஆணையிலுள்ள எவரேனும் குரு, அமைச்சர், மத போதகர் அல்லது வேறு எவரேனுமொரு நபர், இறந்த ஒருவரின் இறுதி விருப்பாவணத்தின் நிறைவேற்றுனரின் கோரிக்கையின் அடிப்படையில் அல்லது இறந்தவரின் சடலத்திற்கு பொறுப்பாகவுள்ள எவரேனுமொரு நபரின் கோரிக்கையின் அடிப்படையில் குறிப்பிட்ட இறந்த நபருடைய இறுதி மதச் சடங்குகளை மேற்கொள்வதற்கு இயலும். |
| **1947 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழான அவசரகால ஒழுங்குவிதிகள்** | பிரிவு 5 | 'பொது மக்கள் பாதுகாப்பின் அக்கறையின்நிமித்தம் மற்றும் பொது ஒழுங்கினைப் பாதுகாப்பதற்கு மற்றும் கலகம், கிளர்ச்சி அல்லது சிவில் குழப்பமொன்றினை அடக்குவதற்கு அல்லது சமுதாய வாழ்விற்கு அவசியமான பொருட்கள் மற்றும் சேவைகளின் விநியோகத்தினைப் பேணுவதற்கு அவசியம் அல்லது அதற்கு உகந்தது' எனத் தோன்றின் அவசரகால ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. |
| **1987 ஆம் ஆண்டு 3 ஆம் இலக்க, தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு** | பிரிவுகள் 2 ரூ 3 | கொவிட்-19 நோய்த்தொற்று நிலைமையுடன் தொடர்புடைய பிரச்சினைகளைக் கையாள்வதற்காகப் பல தொடரான ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்நோய்த்தொற்று தொடர்ச்சியாக |

| | | |
|---|---|---|
| **கட்டளைச் சட்டத்தின்கீழ் (திருத்தப்பட்டவாறு) செய்யப்பட்ட ஒழுங்குவிதிகள்** | | நிலைத்திருக்கின்றமையினால், இவ் ஒழுங்குவிதிகள் கிரமமாக மீள் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.[10] |

மேலும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 2 இற்கமைய, குற்றமொன்று 'பிடியாணையற்ற கைதுக்குரிய குற்றம்' என அறியப்பட்டால், 'சமாதானத்திற்கான அலுவலர்' ஒருவர் (பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸாரின் கடமைகளைப் புரிவதற்காக மாவட்ட அதிபரினால் எழுத்துமூலமாக நியமிக்கப்பட்டுள்ள கிராம சேவை உத்தியோத்தர்கள்) பிடியாணையின்றி குற்றவாளிகளைக் கைது செய்ய இயலும். குறிப்பிட்டக் குற்றமொன்று 'கைதுக்கு பிடியாணை தேவைப்படுகின்ற குற்றமாக' அறியப்பட்டால், சமாதானத்திற்கான அலுவலர் பிடியாணையின்றி குற்றவாளிகளைக் கைது செய்ய இயலாது. பொலிஸ் கட்டளைச்சட்டத்தின் 79(2) ஆம் பிரிவின்படி 'அமைதியைக் குலைப்பதனை நோக்கமாகக் கொண்ட அச்சுறுத்துகின்ற, அவமதிக்கின்ற அல்லது புறக்கணிக்கின்ற வார்த்தைகள் அல்லது நடத்தையின் பிரயோகம் 'பிடியாணையற்ற கைதுக்குரிய குற்றம்' ஆகும்.

தண்டனைக்கோவையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள பிடியாணையற்ற கைதுக்குரிய குற்றங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கும்:

1. ஏதேனுமொரு பிரிவின் மதத்தினைப் புறக்கணிக்கின்ற எண்ணத்துடன் வழிபாட்டிடமொன்றினை ஊறுபடுத்தல் அல்லது தூய்மைகெடச் செய்தல் (பிரிவு 290)
2. ஏதேனுமொரு பிரிவின் மதத்தினைப் புறக்கணிக்கின்ற எண்ணத்துடன் வழிபாட்டிடங்கள் தொடர்பாகச் செய்யப்படுகின்ற செயல்கள் (பிரிவு 290 அ)
3. மத ஒன்றுகூடலுக்கு இடையூறு விளைவித்தல் (பிரிவு 291)
4. ஏதேனும் வழிபாட்டிடம் அல்லது மயானத்தில் அத்துமீறுதல் (பிரிவு 292)

குறிப்பாக, குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேசச் சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கின்ற குற்றமானது, 'பிடியாணைற்ற கைதுக்குரிய மற்றும் பிணையற்ற குற்றமொன்றாகக் கருதப்படுவதுடன் அத்தகைய குற்றமொன்றினை புரிந்ததாகக் கருதப்படுகின்ற சந்தேக நபர் அல்லது குற்றவாளி விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மேல் நீதிமன்றத்தினாலன்றி வேறு எவ்வகையினாலும் பிணையில் விடப்படலாகாது.

தண்டனைக்கோவையில் உள்ள கைதுக்காகப் பிடியாணையினைத் தேவைப்படுத்துகின்ற குற்றங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கும்:

1. மத உணர்வுகளைக் காயப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் சொற்களைப் பிரயோகித்தல் (பிரிவு 291அ), மற்றும்
2. ஏதேனுமொரு பிரிவினரின் மதத்தினை அல்லது மத நம்பிக்கைகளைப் புறக்கணிப்பதனூடாக அப்பிரிவின் மத உணர்வுகளைக் கொந்தளிப்பாக்க வேண்டுமென்ற மற்றும் தீங்கான எண்ணத்துடன் புரியப்படுகின்ற செயல்கள் (பிரிவு 291 ஆ)

[10] இவ் ஒழுங்குவிதிகள் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வலைதளத்திலுள்ள அதிவிசேட வர்த்தமானிகளைப் பார்க்க: http://documents.gov.lk/en/exgazette.php

# வழக்கொன்றிற்கு தயாராவாதற்கான வழிகாட்டல்கள்

## *3. வழக்கொன்றிற்கு தயாராவதற்கான வழிகாட்டல்கள்*

*இப்பிரிவானது மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பான வழக்கில் சட்டத்தரணிகள் தங்களுடைய கட்சிக்காரர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு தயாராகின்றபோது கிடைக்கக்கூடியதாக உள்ளதா என ஆராய வேண்டிய மற்றும் பாதுகாக்க வேண்டிய தகவல்கள் மற்றும் சான்றுகளின் வகைப்பாடுகளை உள்ளடக்குகின்றது.*

*சாத்தியமானளவு விரைவாக கட்சிக்காரருக்கு அவசியமான சட்ட உதவியினை வழங்கும்பொருட்டு, கீழ்வரும் படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன மற்றும் பொருத்தமானத் தகவல் திரட்டப்பட்டுள்ளது என்பதனை சட்டத்தரணி உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.*

***கட்டம் 1***

1. *கட்சிக்காரரின் சுயவிபரக்கோவை*
   - *1.1* *கட்சிக்காரரின் பின்னணித் தகவல்: இது பெயர், முகவரி, பிறந்த திகதி, சமுதாயத்துடனான பிணைப்புக்கள் (தற்போதைய விலாசத்தில் வசிக்கின்ற காலத்தின் அளவு, குடும்ப உறவுகள், கல்விப் பின்புலம், தொழில் பின்புலம், குற்றவியல் குற்றங்கள் தொடர்பான பின்புலம், உடனடியான மருத்துவ தேவைகள், அவசரத் தொடர்பிற்கானத் தகவல் உள்ளடங்கலாக) என்பவற்றை உள்ளடக்கும்.*

2. *நிகழ்வுடன் தொடர்புடைய தகவல்கள்*
   - *2.1* *வழக்குடன் தொடர்புடைய பூர்வாங்கத் தகவல்கள் மற்றும் ஆவணப்படுத்தல். கீழ்வரும் தகவல்கள் (வழக்கின் நிகழ்வுகளுக்கு ஏற்பானதாயிருக்கின்ற ஏனையவற்றுக்கு மத்தியில்) சேகரித்துக் கொள்ளப்பட வேண்டும்:*
     - *2.1.1* *குற்றஞ்சாட்டப்பட்ட நிகழ்வுக்கு வழிவகுத்த சந்தர்ப்பங்கள்*
     - *2.1.2* *நிகழ்வு(கள்) இடம்பெற்றபோது பிரசன்னமாயிருந்த நபர்களின் தகவல்கள்- குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஏதேனும் குற்றத்தில் அவர்கள் பங்கு கொண்டார்களா இல்லையா*
     - *2.1.3* *ஒவ்வொரு நபரினதும் துல்லியமான வகிபாகம் மற்றும் விசேடமாகக் குற்றத்தின் தன்மை*
     - *2.1.4* *நிகழ்வுகள் தொடர்பாகச் சான்றளிக்கக்கூடிய எவரேனும் சாட்சிகளின் தகவல்கள்*
     - *2.1.5* *சாத்தியமான சாட்சிகளின் வாக்குமூலங்கள்*
     - *2.1.6* *கட்சிக்காரருடனான செவ்வியில் சேகரித்துக்கொண்ட ஏனைய சான்று மற்றும்*
     - *2.1.7* *குறித்த நிகழ்வு தொடர்பான ஊடக அறிக்கை போன்ற இரண்டாம்நிலை மூலங்களிலிருந்து சுயாதீனமாக அறிந்துகொண்ட நிகழ்வுகள்.*

***கட்டம் 2***

1. *ஆவணங்கள், நபர்கள் மற்றும் காட்சியினைப் பரிசீலனை செய்தல்*
   - *1.1* *மேலே உள்ள தரவுகள் சேகரிக்கப்பட்டவுடன், கிடைக்கக்கூடியதாகச் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்கள், சான்றாவணங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களைப் பரிசீலனை செய்ய வேண்டும்.*
   - *1.2* *சாத்தியமாயின், குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிகழ்வுகளின் கண் கண்ட சாட்சியாளர்கள் நிகழ்வுகள் தொடர்பாக எவ்வகையான எண்ணப்பாட்டினைக் கொண்டுள்ளனர் என்பதனை அறிந்துகொள்ளும் பொருட்டு அவர்களை நேர்காணல் செய்க.*
   - *1.3* *சாத்தியமாயின், வழக்கு தொடர்பாகப் பொருத்தமானத் தகவல்களைக் கொண்டிருக்கக்கூடிய ஏனைய சாத்தியமான சாட்சிகளை நேர்காணல் செய்க.*
   - *1.4* *சாத்தியமாயின் அல்லது ஏற்பாயின், குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிகழ்வின் காட்சியினைப் பரிசீலனை செய்க.*

**2. காலவரிசையொன்றினைத் தாபிக்க**

*2.1* நிகழ்வுகள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான கட்சிக்காரரின் நோக்கினை நிச்சயப்படுத்திக் கொள்தல் மற்றும் உறுதிப்படுத்துகின்ற சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு காலவரிசையொன்றினைத் தாபித்துக் கொள்தல் (அதாவது, நிகழ்வுகள் மற்றும் நிகழ்ச்சிகள் இடம்பெறுவதற்கு வழிவகுத்த பிரதான நிகழ்வுகள் இடம்பெற்ற கால நேரம் தொடர்பாக விரிவாக கணிப்பு செய்தல்)

***<u>கட்டம் 3</u>***

*1.* **பூர்வாங்க சட்டப் படிமுறைகளைத் தொடங்குதல்**

*1.1* கட்சிக்காரரிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள், உதாரணமாக, உங்களுடைய கட்சிக்காரர் சட்ட நடவடிக்கையொன்றைத் தொடங்க விரும்புகின்றாரா இல்லையா என அறிதல், விரும்புகின்றார் எனில் கட்சிக்காரர் தொடர்வதற்கு விரும்புகின்ற சட்ட நடவடிக்கை யாது என நிச்சயப்படுத்திக் கொள்ளல்.

*1.2* கட்சிக்காரரின் சிறப்பு நலனைப் பாதுகாக்கும் பொருட்டு எடுக்க வேண்டிய பூர்வாங்க சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதனைக் கருத்திற்கொண்டு அவற்றைத் தொடங்குதல்.[11] இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

*1.2.1* அவசியமான ஏதேனும் தகவலைப் பெற்றுக் கொள்ளும்பொருட்டு 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின்கீழ் கோரிக்கையொன்றை செய்தல் (தகவலுரிமைக்கான விண்ணப்பப் படிவத்திற்காக பின்னிணைப்பு 1 இனைப் பார்க்க),[12]

*1.2.2* மருத்துவ சான்று தேவைப்படுமெனின், காயங்கள் அல்லது சிகிச்சை முறையாக, தொழில்முறையாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்தல்,

*1.2.3* உங்களுடைய கட்சிக்காரர் சில குறிப்பான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளார் என்பதனை அறிவித்து குற்றம் புரிந்துள்ள நபர் அல்லது அமைப்பிற்கு கோரிக்கைக் கடிதமொன்றினை அனுப்புதல் அல்லது

*1.2.4* பொருத்தமாயின் பொலிஸ் முறைப்பாடு அல்லது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள் முறையாகப் பதியப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்தல்.

*1.2.5* கிராம அலுவலரின் சான்றிதழைப் பெற்றுக் கொள்தல் (தேவையாயின்).

**2. பொருத்தமான துணை சட்டவாக்கத்தினை மதிப்பீடு செய்தல்**

குறித்த ஆய்வினை மேற்கொள்கையில், நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம், மாநகர சட்டங்கள் மற்றும் 1935 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் மற்றும் 1979 ஆம் ஆண்டு 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகார சபை சட்டம் போன்ற காணி சட்டங்கள் போன்றவற்றின்கீழ் வெளியிடப்பட்ட பொருத்தமான துணை சட்டவாக்கங்களை மதிப்பீடு செய்வதனை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

3. **பாதிக்கப்பட்டவரின் பாதிப்பு அறிக்கையினைப் பதிவு செய்தல்** (குறித்த குற்றம் பாதிக்கப்பட்டவர் மீது ஏற்படுத்தியுள்ள பாதிப்பு தொடர்பானது)

[11] International Bridges to Justice, *Sri Lanka Criminal Defence Practice Manual*, at https://www.ibj.org/wp_main/wp-content/uploads/2020/04/English-4.pdf; DIGNITY and the Public Committee Against torture in Israel (PCATI), *Documenting Torture While Providing Legal Aid: A Handbook for Lawyers*, at https://www.dignity.dk/wp-content/uploads/Documenting-torture-while-providing-legail-aid-A-handbook-for-lawyers-2016.pdf.

[12] தகவலுரிமை விண்ணப்பப் படிவங்கள் மற்றும் செயன்முறை தொடர்பான மேலதிகத் தகவலுக்கு பார்க்க: 'RTI Sri Lanka' at https://www.rti.gov.lk/rti-forms.

2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான உதவி மற்றும் பாதுகாப்பளிப்பதற்கான சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் வழங்கப்பட வேண்டிய நட்டஈட்டின் அளவைத் தீர்மானிக்கின்றபோது மேல் நீதிமன்றம் அல்லது நீதிவான் நீதிமன்றம் அத்தகைய அறிக்கையினைக் கோரலாம்.

குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான உதவி மற்றும் பாதுகாப்பளிப்பதற்கான சட்டத்தின்கீழ் கீழ்வரும் கட்டங்களில் பாதுகாப்பு பொறிமுறைகள் கிடைக்கக்கூடியதாகக் காணப்படும்:

- குற்றவியல் விசாரணையின்போது மற்றும் அதன் பின்னர்
- ஆணைக்குழு விசாரணைகளுக்கு முன்னர், பின்னர் மற்றும் விசாரணையின்போது
- நீதிமுறை நடவடிக்கைகளின் முன்னர், பின்னர் மற்றும் நீதிமுறை நடவடிக்கைகளின்போது.

இச்சட்டத்தின் பிரிவு 22 ஆனது தற்காலிக தங்குமிடம், நிரந்தர இடமாற்றம் மற்றும் மீள்-அடையாளப்படுத்துகை உள்ளடங்கலாக உதவி மற்றும் பாதுகாப்பின் வேறுபட்ட வகைகள் பற்றி குறிப்பிடுகின்றது. இச்சட்டம் தொடர்பான பரீட்சயத்தன்மையானது இவ்விடயப்பரப்பு தொடர்பான வழக்காடலில் ஈடுபட்டுள்ள சட்டத்தரணியொருவருக்கு பயனுள்ளதாக அமையும்.

குறிப்பு: குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான உதவி மற்றும் பாதுகாப்பளிப்பதற்கான சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பின் தன்மை தொடர்பான தகவல்கள் குறைவாகவே காணப்படுகின்றது. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் 2019 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கையின் பிரகாரம், அதிகார சபையால் பெற்றுக் கொள்ளப்பட்ட 252 முறைப்பாடுகளில், பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள முறைப்பாட்டாளர்களின் எண்ணிக்கை பதினான்காகவே அமைந்துள்ளது.[13] ஆகவே, அவசியமானவிடத்து, சட்டத்தரணிகள் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிக்காரர்கள் சார்பாக அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பின் துல்லியமான தன்மை மற்றும் வினைத்திறனாந்தன்மையினை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்தல் வேண்டும்.

[13] Annual Report-2019, National Authority for the Protection of Victims and Witnesses, at https://napvcw.gov.lk/img/gallery/publications/Annual_Report_2019_English.pdf.

# மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் தொடர்புடைய வழிக்குகளுக்கான வழிநடத்தல்

## 4. மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் தொடர்புடைய வழக்குகளுக்கான வழிநடத்தல்

இப்பிரிவானது மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் தொடர்புடைய குறிப்பிட்ட வகையான வழக்குகளை எவ்வாறு வழிநடத்துவது என்பது தொடர்பான வழிகாட்டல்களை சட்டத்தரணிகளுக்கு வழங்குகின்றது. இவ்வழிகாட்டலானது மூன்று படிமுறைகள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ளன:

- படிமுறை 1: மீறலொன்றை எவ்வாறு தீர்மானிப்பது
- படிமுறை 2: நீதிமன்றமொன்றை எவ்வாறு தெரிவு செய்வது
- படிமுறை 3: வழக்கினைப் பதிவு செய்தல்

இப்பிரிவானது ஆரம்பத்தில் மேலுள்ள படிமுறைகளை பொதுவானரீதியில் கலந்துரையாடுகின்றது. அதன்பின்னர், மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பான வழக்காடலில் பொதுவாக எதிர்கொள்ளப்படுகின்ற பல கருப்பொருட்கள் தொடர்பில் இப்படிமுறைகள் பிரயோகப்படுத்தப்படுகின்றன. இக்கருப்பொருட்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

1. மத நிறுவனங்களைக் கட்டுமானம் செய்தல் அல்லது பராமரித்தல் தொடர்பான ஒழுங்குவிதி
2. மத நடைமுறையொன்றின் மீதான மட்டுப்பாடு
3. மத அடையாளத்தினை அடிப்படையாகக் கொண்ட பாரபட்சம்
4. மத அடையாளத்துடன் தொடர்புடைய வன்முறை
5. பேச்சுடன் தொடர்புடைய குற்றங்கள்


ஒவ்வொரு பிரிவிற்கு கீழும் குறிப்பான சந்தர்ப்பங்களை சட்டத்தரணிகள் எவ்வாறு அணுக வேண்டும் என்பதனைக் குறிப்பிடுவதற்கான உதாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### அ. பொதுவான படிமுறைகள்

#### படிமுறை 1: மீறலொன்றை எவ்வாறு தீர்மானிப்பது


குறிப்பிட்ட சந்தர்ப்பமொன்று மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் பரப்பிற்குள் உள்ளடக்கப்படுகின்றதா என்பதனை எவ்வாறு தீர்மானிப்பது என்பது தொடர்பான வழிகாட்டலை உரு 1 வழங்குகின்றது. சம்பவங்களின் பட்டியல் முழுமையானது அல்ல.

ஆம் எனில், அது கீழ்வரும் பிரச்சினைகளுள் ஒன்றாகக் காணப்படும்:



உரு 1

Mk; vdpy;> mJ fPo;tUk; gpur;rpidfSs; xd;whff; fhzg;gLk;:



*படிமுறை 2: நீதிமன்றத்தினை எவ்வாறு தெரிவு செய்வது?*

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் பரப்பிற்கு மீறலொன்று இடம்பெறின், அவ்விடயத்தினை சிறப்பாக வழக்காடக்கூடிய நீதிமன்றம் எது என்பதனைத் தெரிவு செய்வதற்கு சட்டத்தரணி முனைய வேண்டும். அதனைச் செய்கையில், கட்சிக்காரரினால் வேண்டப்படுகின்ற நிவாரணத்தின் வகையினைக் கருத்திற் கொண்டு கட்சிக்காரருக்கான சிறந்த வழக்காடல் முறை எதுவாயிருக்கும் என்பதனைக் கருத்திற்கொண்டு, நீதியினை வழங்குவதற்கான நியாயதிக்கமுள்ள நீதிமன்றமொன்றினைத் தெரிவு செய்ய வேண்டும்.

கீழே பட்டியலிடப்பட்டுள்ள பூர்வாங்கப் படிமுறைகள் நீதிமன்றமொன்றினைத் தெரிவு செய்யும்போது கற்றுணர்ந்த தீர்மானமொன்றினை எடுப்பதற்கு சட்டத்தரணிக்கு உதவி செய்யும்.

| | | |
|---|---|---|
| I. மீறலின் தன்மை யாது? | சட்டம், ஒழுங்குவிதி அல்லது வழிகாட்டலொன்று | ஆ/இ |
| | வாய்மொழிமூலமான அல்லது எழுத்துமூலமான தொடர்பாடலொன்று | ஆ/இ |
| | கைது அல்லது அடைத்துவைப்பு | ஆ/இ |
| | உடல்ரீதியான வன்முறைச் செயலொன்று | ஆ/இ |
| | உடல்ரீதியற்ற வன்முறைச் செயலொன்று (அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு) | ஆ/இ |

மீறலின் தன்மை அடையாளப்படுத்தப்பட்ட பின்னர், நீதிமன்றத்தினைத் தெரிவு செய்யும்பொருட்டு மீறலுக்கு பொறுப்புடைய தரப்பு அடையாளப்படுத்தப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| II. மீறலுக்கு பொறுப்பானவர் அல்லது உடந்தையாக இருந்தவர் யார்? | அரச அதிகாரி(கள்) அரச சார்பற்ற செயற்பாட்டாளர்(கள்) | ஆ/இ |
| | அரச அதிகாரி(கள்)யின் ஒத்துழைப்பு அல்லது ஆதரவுடன் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்(கள்) | ஆ/இ |
| | அரசின் ஊக்குவிப்புடன் அல்லது சகிப்புத்தன்மையுடன் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்(கள்) (குழுக்களாக அல்லது தனிநபர்களாக) | ஆ/இ |

மேலுள்ள கேள்விகளுக்கான பதில்களின் அடிப்படையில், கீழே வழங்கப்பட்டுள்ள நீதிமன்றத் தெரிவுகளுள் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்யலாம்.

| தெரிவு இல. | நீதிமன்றம் | முக்கிய தகவல் |
|---|---|---|
| *1.* | ***உச்ச நீதிமன்றம்***<br><br>*அரசியலமைப்பின் உறுப்புரை 118 மற்றும் 126* | • குடியரசின் மிகமேலானதும் முடிவானதுமானப் பதிவேட்டு நீதிமன்றம்.<br>• ஏதேனும் அடிப்படை உரிமை அல்லது மொழி உரிமை ஆட்சித்துறை நடவடிக்கையால் அல்லது நிர்வாக நடவடிக்கையால் மீறப்படுகின்றபோது அல்லது உடனடியாக மீறப்படவுள்ளபோது, அது தொடர்பாக விசாரிப்பதற்கான மற்றும் தீர்மானிப்பதற்கான தனியானதும் பிரத்தியேகமானதுமான நியாயாதிக்கம்.<br>• எந்தவொரு மனு தொடர்பாகவும் அதன் சூழ்நிலைகளுக்கமைய நீதிமன்றம் நீதியானதும் ஒப்புரவானதுமென கருதுகின்ற அத்தகைய நிவாரணத்தினை அல்லது அத்தகைய பணிப்புக்களை வழங்குவதற்கு உச்ச நீதிமன்றம் அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br>• உயர்நீதிமன்றமானது, மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் அல்லது ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தால், நியாய சபையால் அல்லது வேறு நிறுவனத்தால் புரியப்பட்ட எல்லா நிகழ்வுப் பிழைகளையும் அல்லது |

| | | |
|---|---|---|
| | | சட்டப் பிழைகளையும் திருத்துதல் தொடர்பில், இலங்கை குடியரசுக்காகவும் குடியரசுக்குள்ளும் குடியியல், குற்றவியல், மேனமுறையீட்டு நியாயாதிக்கம் கொண்ட இறுதியான நீதிமன்றமாக, அரசியலமைப்புக்கமைய இருத்தல் வேண்டுமென்பதோடு, உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்களும் கட்டளைகளும் அத்தகைய எல்லாக் கருமங்களிலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் முற்றும் முடிவுமானவையாக இருத்தல் வேண்டும்.<br>• தனது ஏதேனும் அடிப்படை உரிமை அல்லது மொழி உரிமை ஆட்சித்துறை அல்லது நிர்வாக நடவடிக்கையால் மீறப்பட்டுவிட்டது அல்லது மீறப்படவுள்ளது என குற்றஞ்சாட்டுகின்ற எந்தவொரு நபராலும் அடிப்படை உரிமைகளுக்கான மனுவொன்றினை <u>ஒரு மாதக் காலப்பகுதிக்குள் உச்ச நீதிமன்றத்தில்</u> பதிவு செய்ய வேண்டும். இவ் ஒருமாத காலப்பகுதிக்கான விதிவிலக்குகள் 1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.<br>• யாருடைய உரிமைகள் மீறப்பட்டுள்ளனவோ அவர் தாமாக அல்லது தனது சட்டத்தரணியினூடாக நீதிமன்றத்திற்கு மனு செய்தல் வேண்டுமென்றே உச்சநீதிமன்றம் பிரதானமாகத் தேவைப்படுத்துகின்றது. பாதிக்கப்பட்டவர்களின் உறவினர் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் மனு செய்வது மற்றும் மனுதாரர்கள் அக்கறையினைப் பகிர்ந்து கொள்கின்றபோது அல்லது பாரியளவான பொது அக்கறை உள்ளபோது மனுதாரர்கள் கூட்டாக மனு செய்வது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.[14] |
| **2.** | **மேன்முறையீட்டு நீதிமன்றம்**<br><br>அரசியலமைப்பின் உறுப்புரை 138, 139, 140 மற்றும் 141 | • எல்லா நிகழ்வுப் பிழைகளையும் அல்லது சட்டப் பிழைகளையும் திருத்துவதற்கான மேன்முறையீட்டு நியாயாதிக்கம்.<br>• மேன்முறையீட்டு நீதிமன்றமானது ஏதேனும் கட்டளையை, தீர்ப்பை, தீர்வையை அல்லது தண்டனைத்தீர்ப்பைச் சட்டத்துக்கிணங்க உறுதிப்படுத்தலாம், நேர்மாறாக்கலாம், திருத்தலாம் அல்லது திரிபுபடுத்தலாம், அல்லது பொருத்தமானதென மேன்முறையீட்டு நீதிமன்றம் எண்ணுகின்றவாறான அத்தகைய நியதிகளின்மேல் அத்தகைய முதனிலை நீதிமன்றத்துக்கு, நியாயசபைக்கு அல்லது வேறு நிறுவனத்திற்குப் பணிப்புகளை வழங்கலாம் அல்லது புதிதாக விளக்கம் நடத்தும்படி கட்டளையிடலாம் அல்லது மேற்கொண்டு விளங்குமாறு கட்டளையிடலாம்.<br>• ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் அல்லது நியாய சபையின் அல்லது வேறு நிறுவனத்தின் பதிவேடுகளைச் சோதனையிடுவதற்கும் பரிசோதிப்பதற்குமான முழுத் தத்துவத்தினையும் அதிகாரத்தினையும் கொண்டிருக்கும் என்பதுடன் ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் அல்லது வேறு நிறுவனத்தின் நீதிபதிக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு அல்லது நியாய சபைக்கெதிராக உறுதிகேள் எழுத்தாணை[15], தடையீட்டெழுத்தாணை[16], மேற்சொல் எனும் எழுத்தாணை[17], ஆணையீட்டெழுத்தாணை[18], மற்றும் யாதுரிமை எழுத்தாணை [19] என்ற இயல்பினவான கட்டளைகளைச் சட்டபடி அனுமதித்து வழங்குவதற்கான தத்துவத்தினையும் அதிகாரத்தினையும் கொண்டிருக்கும். |

[14] See *Bulankulama and Others v Secretary, Ministry of Industrial Development and Others (Eppawela Case) [2000] 3 SLR 243.*

[15] உறுதிகேள் எழுத்தாணை என்பது வலிதற்ற அல்லது சட்டமுரணான மற்றும் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டவற்றை இல்லாது செய்கின்ற ஆணையாகும். See *Harjani v Indian Overseas Bank [2005] 1 SLR 167* for more information.

[15] Writ of mandamus is a writ to compel a public authority to perform a public duty.

[16] தடையீட்டு எழுத்தாணை என்பது நியாயாதிக்கத்தினை மிஞ்சுகின்ற செயல்களைத் தடுக்கின்ற ஆணையாகும்.

[17] மேற்சொல் எனும் எழுத்தாணை என்பது வலிதான அதிகாரப் பிரயோகத்தினைக் கட்டளையிடுகின்ற ஆணையாகும்.

[18] ஆணையீட்டு எழுத்தாணை என்பது பகிரங்கக் கடமையொன்றைச் செய்யுமாறு பகிரங்க அதிகார சபையொன்றைக் கட்டாயப்படுத்துகின்ற ஆணையாகும். See Karunathilaka v Dayananda Dissanayake, Commissioner of Elections [1999] 1 SLR 157, Podimhatmaya v. The Land Reform Commission [1990] 2 SLR 416 at 419, Rashid v. Rajith Senaratne, Ministry of Lands and others [2004] 1 SLR 312 for more information.

[19] யாதுரிமை எழுத்தாணை என்பது ஒரு நபர் பகிரங்கப் பதவியினை வகிப்பதற்கான அதிகாரத்தினை சவாலுக்குட்படுத்துகின்ற ஆணையாகும். See *Dilan Perera v Rajitha Senaratne [2000] 2 SLR 79* for more information.

| | | |
|---|---|---|
| | | • மேன்முறையீட்டு நீதிமன்றமானது ஆட்கொணர்வு எழுத்தாணைகளை வழங்குவதற்கான அதிகாரத்தினையும் கொண்டுள்ளது.[20] |
| 3. | **மேல் நீதிமன்றம்**<br><br>*அரசியலமைப்பின் உறுப்புரை 154ஞ, 1978 ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டம் (திருத்தப்பட்டவாறு)* | • மாகாணத்தினுள் புரியப்படும் தவறுகள் தொடர்பில் இலங்கை மேல் நீதிமன்றத்தின் தொடக்கக் குற்றவியல் நியாயாதிக்கம்.<br>• அம்மாகாணத்தினுள் நீதிவான் நீதிமன்றங்களினாலும், ஆரம்ப நீதிமன்றங்களினாலும் பதியப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட குற்றத்தீர்ப்புக்கள், தண்டனைத் தீர்ப்புக்கள், கட்டளைகள் தொடர்பில் மேன்முறையீட்டு மீளாய்வு நியாயாதிக்கம்.<br>• மாகாண சபைகள் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பில் பின்வரும் கட்டளைகளை வழங்குவதற்கான நியாயாதிக்கம்:<br>(அ) மாகாணத்தினுள் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆட்கள் தொடர்பில் ஆட்கொணர் எழுத்தாணை என்ற தன்மையிலான கட்டளைகள்: அத்துடன்<br>(ஆ) (i) ஏதேனும் சட்டத்தின்கீழ், அல்லது<br>(ii) அம்மாகாணத்திற்கென தாபிக்கப்பட்ட மாகாணசபையினால் ஆக்கப்படும் ஏதேனும் நியதிச்சட்டத்தின்கீழ்,<br>ஏதேனும் தத்துவத்தை அம்மாகாணத்தினுள் பிரயோகிக்கும் எவரேனும் ஆளுக்கு எதிராக உறுதிகேள் எழுத்தாணை, தடையீட்டெழுத்தாணை, மேற்செலலெனும் எழுத்தாணை, ஆணையீட்டெழுத்தாணை, யாதுரிமை எழுத்தாணை என்ற தன்மையிலான கட்டளைகள்.<br>• மேல் நீதிமன்றமானது சாதாரணமாக அதிகாரத்தினையும் தத்துவத்தினையும் கொண்டிருக்கின்ற அதேவேளை கீழுள்ள விடயங்கள் தொடர்பாக எவரேனும் ஆளுக்கு எதிராக தொடங்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கான அனைத்து வழக்குத் தொடர்வுகளையும் எழுத்தினாலான சட்டத்தினால் குறிப்பிடப்பட்டுள்ளதற்கிணங்க விசாரித்து, விளக்கம் கேட்டு, தீர்மானிக்க வேண்டுமென்று தேவைப்படுத்தப்படுகின்றது:<br>(அ) முழுமையாக அல்லது பகுதியளவில் இலங்கையில் புரியப்பட்ட குற்றம்<br>(ஆ) இலங்கையின் ஆள்புல நீரின் மீது அல்லது நீரின் மேல் எவரேனுமொரு நபரினால் புரியப்பட்ட ஏதேனுமொரு குற்றம்,<br>(இ)இலங்கையின் விமானப்பரப்பில் எவரேனுமொரு நபரினால் புரியப்பட்ட ஏதேனுமொரு குற்றம்,<br>(ஈ) குறிப்பிட்ட குற்றம் நாட்டின் சடடத்தின்படி கடற் கொள்ளையாய் இருக்குமாயின், ஆழ் கடல் பரப்பின்மீது எவரேனுமொரு நபரினால் புரியப்பட்ட ஏதேனுமொரு குற்றம்,<br>(உ) இலங்கையில் ஏதேனுமொரு வகையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஏதேனும் கப்பலில் அல்லது ஏதேனும் விமானத்தில் அல்லது அவை தொடர்பாக எவரேனுமொரு நபரால் ஏதேனுமொரு இடத்தில் புரியப்படுகின்ற ஏதேனுமொரு குற்றம் அல்லது<br>(ஊ) இலங்கை பிரஜையொருவரால் இலங்கை ஆள்புலத்திற்கு வெளியே ஏதேனுமொரு வகையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஏதேனும் கப்பலில் அல்லது ஏதேனும் விமானத்தில் அல்லது அவை தொடர்பாக புரியப்படுகின்ற ஏதேனுமொரு குற்றம். |
| 4. | **நீதிவான் நீதிமன்றம்**<br><br>*1978 ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் பிரிவு 30 (திருத்தப்பட்டவாறு)* | • தண்டனைக் கோவை அல்லது குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக் கோவை அல்லது அந்நேரத்தில் வலுவிலுள்ளதும் அவ்வாறு செய்யும்படி வலுவளிக்கின்றதும் அல்லது தேவைப்படுத்துகின்றதுமான வேறேதேனும் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளினால் நீதிவான் நீதிமன்றங்கள் தொடர்பில் வலுவளிக்கப்பட்டுள்ள, கொண்டிருக்க வேண்டும், பிரயோகிக்க வேண்டும் மற்றும் செய்ய வேண்டுமென |

[20] ஆட்கொணர்வு எழுத்தாரண என்பது நபரொருவரின் கட்டுக்காவல் அல்லது அடைத்து வைப்பு தொடர்பான சட்டநெறிமுறைத் தன்மையினை தீர்மானிக்கும்பொருட்டு அந்நபரை முன்னிலைப்படுத்துவதற்காக செய்யப்படுகின்ற ஆணை.

| | | |
|---|---|---|
| | | தேவைப்படுத்தப்படுகின்ற அனைத்து அதிகாரங்கள் மற்றும் தத்துவங்களையும் நீதிவான் நீதிமன்றங்கள் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அனைத்துக் கடமைகளையும் புரிதலும் வேண்டும். |
| *5.* | **நீதிவான் நீதிமன்றம்**<br><br>தனிப்பட்ட பிராதுக்கள்<br><br>*1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக் கோவையின் (திருத்தப்பட்டவாறு) பிரிவு 136(1)(அ)* | • விசாரணை செய்வதற்கு அல்லது விளங்குவதற்கு அத்தகைய நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கமுள்ள தவறொன்று புரியப்பட்டுள்ளதென அத்தகைய நீதிமன்றத்தின் நீதிவானொருவருக்கு வாய்மூலமான அல்லது எழுத்திலான முறைப்பாடொன்றைச் செய்வதன்மூலம்: ஆயின், அத்தகைய முறைப்பொடொன்று எழுத்திலிருப்பின், வழக்குரைப்பவர் ஒருவரால் வரையப்பட்டு அவரால் மேலொப்பமிடப்படுதலும், வழக்குரைப்பவரால் ஒப்பமிடப்படுதலும் வேண்டும்:<br><br>• அத்தகைய முறைப்பாடு அரச அதிகாரி அல்லது அலுவலர் ஒருவருக்கெதிராக அவரின் உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பானதாக அமைகின்ற சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் இவ் ஏற்பாட்டின்கீழ் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டதன் பின்னர், சட்டமா அதிபர், சொலிசிட்டர் ஜெனரல், அரச தரப்பு சட்டத்தரணி அல்லது சட்டமா அதிபரினால் பொதுவாக அல்லது விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட வழக்கறிஞர் முறைப்பாட்டாளரின் சம்மதமின்றி முறைப்பாட்டாளருக்காக பிரசன்னமாக முடியாது. |
| *6.* | **இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**<br><br>*1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 10 மற்றும் 14* | • ஆணைக்குழுவானது தனது சுய தீர்மானத்தின்பேரில் அல்லது பாதிக்கப்பட்ட நபரொருவரால் அல்லது பாதிக்கப்பட்ட குழுவொன்றால் அல்லது பாதிக்கப்பட்ட நபர் அல்லது குழு சார்பாக செயற்படுகின்ற நபரொருவரால் செய்யப்பட்ட முறைப்பாட்டின்பேரில், அந்நபர் அல்லது குழு தொடர்பான அடிப்படை உரிமை மீறல் தொடர்பான அல்லது உடனடி மீறலொன்றுக்கான சாத்தியம் தொடர்பான குற்றச்சாட்டினை விசாரணை செய்யலாம்.<br>• பிரிவு *14* இன்கீழ் ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட விசாரணையானது ஆட்சித்துறை அல்லது நிர்வாக நடவடிக்கையினால் அல்லது நபரொருவரினால் அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டுள்ளது அல்லது மீறப்படவுள்ளது என்பதனைக் கண்டறிந்தால், இணக்கம் அல்லது மத்தியஸ்தம் தொடர்பானத் தெரிவுகளைக் கருத்திற்கொண்டு ஆணைக்குழு கீழ்வருவனவற்றை செய்யலாம்: (ை) அத்தகைய அடிப்படை உரிமையினை மீறிய நபர் அல்லது நபர்களுக்கெதிராக வழக்குத்தொடர்வு அல்லது வேறு நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு பொருத்தமான அதிகாரசபைகளுக்கு விதந்துரைத்தல்˙<br>(ை) குறித்த அவ்விடயத்தை விசாரிப்பதற்கான மற்றும் தீர்மானிப்பதற்கான நியாயாதிக்கத்தினை நீதிமன்ற விதிகளின்படி கொண்டுள்ள ஏதேனுமொரு நீதிமன்றத்திற்கு, எவரேனுமொரு நபர் அந்நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினை வேண்டுவதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள கால எல்லைக்குள்ளாக ஆற்றுப்படுத்த முடியும் (ைை) அம்மீறலைத் தடுக்கும், அம்மீறலுக்கு நிவாரணமளிக்கும் அல்லது அம்மீறலின் தொடர்ச்சியினைத் தடுக்கும் நோக்கோடு பொருத்தமான அதிகார சபைக்கு அல்லது நபருக்கு அல்லது நபர்களுக்கு அது பொருத்தமானதெனக் கருதுகின்ற விதந்துரைகளைச் செய்யலாம். |

**படிமுறை 3: வழக்கினைப் பதிவு செய்தல்**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் சட்டத்தரணி மதிப்பீடு செய்த பின்னர், வழக்கிற்கு உகந்த சிறப்பான நீதிமன்றத்தினைத் தெரிவு செய்வதற்காக கீழே விளக்கப்பட்டுள்ள பயிற்சிகளில் ஈடுபட வேண்டும். கீழே தரப்பட்டுள்ள அட்டவணையானது நிவாரணம் மற்றும் நீதிமன்றங்களின் வகையினை குறிப்பிடுவதனூடாக இதுவரை சொல்லப்பட்டத் தகவல்களை சுருக்கமாகக் குறிப்பிடுகின்றது. இது சாத்தியமான அனைத்து தெரிவுகளையும் உள்ளடக்கிய முழுமையானத் தொகுப்பல்ல, ஆனால், இவ் அட்டவணையானது மிகப் பொதுவானத் தெரிவுகளைப் பொருத்தமான செயற்பாட்டாளர்கள் மற்றும் உகந்த நீதிமன்றங்களுடன் இணைத்து காட்சிப்படுத்தியுள்ளது.

| இல. | செய்தவர் | குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நடத்தை | நிவாரணம் | நீதிமன்றம் |
|---|---|---|---|---|
| 1. | அரச அதிகாரி | சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்படுகின்ற செயலைச் செய்யாமை | ஆணையீட்டு எழுத்தாணை | மேன்முறையீட்டு நீதிமன்றம் |
| 2. | அரச அதிகாரி | சட்டத்தினால் அனுமதிக்கப்படாத செயலை செய்கின்றமை | உறுதிகேள் எழுத்தாணை / தடையீட்டு எழுத்தாணை | மேன்முறையீட்டு நீதிமன்றம் |
| 3. | அரச அதிகாரி | சட்டத்தில் குறிப்பிடப்படாத நியாயமற்ற நிபந்தனைகளை முன்வைத்தல் | உறுதிகேள் எழுத்தாணை / தடையீட்டு எழுத்தாணை | மேன்முறையீட்டு நீதிமன்றம் |
| 3. | அரச அதிகாரி | உங்களுடைய கட்சிக்காரர் செய்த முறைப்பாடொன்று தொடர்பாக நடவடிக்கை எடுக்கத் தவறுதல் | ஆணையீட்டு எழுத்தாணை / அடிப்படை உரிமை / இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு | மேன்முறையீட்டு நீதிமன்றம;/ உச்ச நீதிமன்றம் / இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| 4. | அரச அதிகாரி | உங்களுடைய கட்சிக்காரர் தனது வெளிப்படுத்தலுக்கான மற்றும் தவல்களைப் பகிர்வதற்கான உரிமையினைப் பிரயோகிப்பதனைத் தடுத்தல் | அடிப்படை உரிமை / இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு | உச்ச நீதிமன்றம் / இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| 5. | அரச அதிகாரி | உங்களுடைய கட்சிக்காரர் மத நடவடிக்கைகளுக்காக ஒன்று கூடுவதனை மற்றும் ஒத்துழைப்புடன் செயற்படுவதனைத் தடுத்தல் | அடிப்படை உரிமை / இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு | உச்ச நீதிமன்றம் / இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| 6. | அரச அதிகாரி | உங்களுடைய கட்சிக்காரர் மத சடங்கு அல்லது நடைமுறையொன்றை பின்பற்றுவதனைத் தடுத்தல் | அடிப்படை உரிமை / இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு | உச்ச நீதிமன்றம் / இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| 7. | அரச அதிகாரி | உங்களுடைய கட்சிக்காரரின் மத அடையாளத்தின் காரணமாக உங்களுடைய கட்சிக்காரரை வேறொரு குழுவினரை விட வித்தியாசமாக நடத்துதல் | அடிப்படை உரிமை/ இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு | உச்ச நீதிமன்றம் / இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |

| | | | | |
|---|---|---|---|---|
| **8.** | அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பு அல்லது ஆதரவுடன் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | கொலைகள், தாக்குதல், ஆதனச் சேதம், அச்சுறுத்தல், மிரட்டல், வன்முறைக்கான தூண்டுதல் | தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவுகள் 290-294இ 340-349இ 408-421இ 483-487, | மேல் நீதிமன்றம் |
| | | உங்களுடைய கட்சிக்காரரின் நடவடிக்கைகள் பொது இடைஞ்சலை ஏற்படுத்துவதாக குற்றஞ்சாட்டுதல் (உங்களுடைய கட்சிக்காரர் இவ்வழக்கில் பிரதிவாதியாக இருக்கலாம்) | குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் பிரிவுகள் 81 அல்லது 98 அல்லது குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச் சட்டத்தின் பிரிவு 3 இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள குற்றவியல் வழக்குகள் | நீதிவான் நீதிமன்றம் |
| **9.** | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் (குழுக்கள் அல்லது தனிநபர்கள்) அரசின் ஊக்குவிப்புடன் அல்லது சகிப்புத்தன்மையுடன் | கொலைகள், தாக்குதல், ஆதனச் சேதம், அச்சுறுத்தல், மிரட்டல், வன்முறைக்கான தூண்டுதல் | தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவுகள் 290-294இ 340-349இ 408-421இ 483-487, | உச்ச நீதிமன்றம் |
| | | உங்களுடைய கட்சிக்காரரின் நடவடிக்கைகள் பொது இடைஞ்சலை ஏற்படுத்துவதாக குற்றஞ்சாட்டுதல் (உங்களுடைய கட்சிக்காரர் இவ்வழக்கில் பிரதிவாதியாக இருக்கலாம்) | குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் பிரிவுகள் 81 அல்லது 98 அல்லது குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச் சட்டத்தின் பிரிவு 3 இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள குற்றவியல் வழக்குகள | நீதிவான் நீதிமன்றம் |

முறைப்பாடொன்று தொடர்பில் பொலிஸ் நடவடிக்கை எடுக்காதிருக்கின்ற சந்தர்ப்பத்தில், சட்டத்தரணி குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக் கோவையின் பிரிவு 136(1) இன்கீழான தனிப்பட்ட முறைப்பாடொன்றினைப் பதிவு செய்யும் தெரிவினையும் (மேலே கலந்துரையாடப்பட்டது) கருத்திற் கொள்ளலாம். எவ்வாறெனினும், இதன்போது சட்டத்தரணி சான்றின் பெறுமதியினையுடைய பிரதான அறிக்கைகளை அணுகுவதில் உள்ள சாத்தியமான சவால்கள் தொடர்பிலும் கவனத்திற் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட சில வளங்கள் (சட்ட மருத்துவ அதிகாரி அல்லது தடயவியல் பகுப்பாய்விற்கான அரசாங்க பகுப்பாய்வாளர், தேவையாயின்) தொடர்பில் அரசுக்கு காணப்படுகின்ற அதே அணுகுதல் தனிப்பட்ட திறத்தவர்களுக்கு காணப்படாது.

### m. வழக்காடலுக்கான பிரதான கருப்பொருள் பகுதிகள்

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் தொடர்புடைய வழக்காடலில் பல பொதுவான கருப்பொருட்கள் காணப்படுகின்றன. கீழ்வரும் உபபிரிவுகள் இத்தகைய கருப்பொருட்களை ஆராய்கின்றது என்பதுடன் உதாரணங்களைப் பயன்படுத்தி ஒவ்வொரு கருப்பொருட் பகுதிக்கான வழக்காடல் தொடர்பிலும் உதாரணங்களை வழங்குகின்றது.

#### *(1) மத நிறுவனமொன்றின் கட்டுமானம் அல்லது பராமரிப்பு தொடர்பான ஒழுங்குவிதி*

பொதுவாக, வழிபாட்டிடமொன்று அல்லது ஏனைய மத நிறுவனமொன்றினைக் கட்டுவதற்கான அனுமதியினை இடைநிறுத்துதல் அல்லது மறுத்தல், வழிபாட்டிடமொன்றிற்கான கட்டாயப் 'பதிவு', நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மத நிறுவனமொன்றின் கட்டுமானப் பணி அல்லது பராமரிப்பு பணிக்கு எதிராக பொது இடையூறு வழக்குகள் பதிவு செய்யப்படுதல் என்பன இப்பகுதியின் கீழ் தோன்றக்கூடிய மீறல்களாகும்.

**வழக்கு கற்கை அ**

ஓ எனும் மதகுழுவொன்றின் தலைவர் மத போதனை நிகழ்வுகளை நடத்துவதற்காக இரு மாடிக் கட்டிடமொன்றை அமைப்பதற்கான அபிவிருத்தித் திட்டத்திற்கான அனுமதியினைக் கோரி பிரதேச சபைக்கு விண்ணப்பித்தார். அத்திட்டத்திற்கு அனுமதியளிக்கப்பட்டது. கட்டிடத்தின் அடித்தளம் கட்டி நிறைவு செய்யப்பட்ட பின்னர், ஓ கற்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்தார். சில வருடங்களுக்கு பின்னர், ஓ முதலாவது மாடியினைக் கட்ட ஆரம்பித்தார். ஆனால், வதிவிடவாசிகள் மற்றும் உள்ளூர் பௌத்த பிக்குவின் போராட்டம் காரணமாக அக்கட்டுமானப் பணியினை நிறுத்துமாறு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவரினால் வழங்கப்பட்ட கடிதத்தினூடாக பிரதேச சபை கேட்டுக் கொண்டது. *ஆடீசுயு.ீ.2ளுயுனு.ீ.10.ீ.ஊழுடூ.புநுடீ.2013* இலக்கத்தினையுடைய சுற்றுநிருபத்தின்படி மத விவகாரங்கள் அமைச்சிலிருந்து பெற்றுக் கொண்ட அனுமதியினை முன்வைக்குமாறும் ஓ கேட்டுக்கொள்ளப்பட்டார்.


**வழக்கு கற்கை அ இனை வழிநடத்தல்**

*படிமுறை 1: மீறலைத் தீர்மானித்தல்*

இவ் எடுத்துக்காட்டில், *ஆ.து.ஆ. குயசடை நவ யட எ. டீயனெயசயயயஅய ீசயனநளாலைய ளுயடிாய நவ யட*[21] என்ற வழக்கின் நிகழ்வுகளைப் போல மத நிலையத்தினைக் கட்டுவதற்கான அனுமதியினை ஓ சட்டபூர்வமாகப் பெற்றுக் கொண்டிருந்தார். மீறலொன்றைத் தீர்மானிப்பது தொடர்பான பிரிவில் சொல்லப்பட்ட விடயங்களின்படி, இச்சம்பவமானது ஓ இன் மதத்தினை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தினை உள்ளடக்குகின்றது என்பதுடன் சட்டத்தின் பிரயோகத்தில் ஓ இற்கு பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது, அதாவது, மத அடையாளத்தின் காரணமாக கட்டுமானத்தை இடைநிறுத்துமாறு கடிதமொன்றினைப் பெற்றுக் கொள்ளல். சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவரினால் இக்கடிதத்தை வழங்கியமையை அச்சுறுத்தலுக்கான அல்லது பயமுறுத்தலுக்கான உத்தியொன்றாகவும் சட்டத்தரணி கருத இயலும். கீழே உள்ள உரு 2 ஆனது இச்சம்பவம் தொடர்பான சாத்தியமான அனைத்து மீறல்களையும் மதிப்பீடு செய்வதுடன் எந்நீதிமன்றத்தில் வழக்கினைத் தொடர்வது என்பதனை சட்டத்தரணி மற்றும் கட்சிக்காரர் தீர்மானிப்பதற்கேற்றவகையில் அவற்றை காட்சிப்படுத்துகின்றது.

[21] SC (F.R.) No. 92/2016.

**உரு 2**




மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல், பாரபட்சம் அல்லது வன்முறைக்கு காரணமாயமைந்த நுட்பமான செயல் யாதென சட்டத்தரணி தீர்மானித்தல் வேண்டும்.

*படிமுறை 2: நீதிமன்றத்தினைத் தெரிவு செய்தல்*

| | | |
|---|---|---|
| I.<br>மீறலின் தன்மை யாது? | சட்டம், ஒழுங்குவிதி அல்லது வழிகாட்டலொன்று | இ |
| | **வாய்மொழிமூலமான அல்லது எழுத்துமூலமான தொடர்பாடலொன்று** | **ஆ** |
| | கைது அல்லது அடைத்துவைப்பு | இ |
| | உடல்ரீதியான வன்முறைச் செயலொன்று | இ |
| | உடல்ரீதியற்ற வன்முறைச் செயலொன்று (அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு) | இ |

| | | |
|---|---|---|
| II.<br>மீறலுக்கு பொறுப்பானவர் அல்லது உடந்தையாக இருந்தவர் யார்? | அரச அதிகாரிகள் | **ஆ** |
| | அரச அதிகாரி(கள்)யின் ஒத்துழைப்பு அல்லது ஆதரவுடன் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்(கள்) | இ |
| | அரசின் ஊக்குவிப்புடன் அல்லது சகிப்புத்தன்மையுடன் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்(கள்) (குழுக்களாக அல்லது தனிநபர்களாக) | இ |

சட்டத்தரணி தனது கட்சிக்காரரிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்கின்றபோது, கீழ்வரும் தெரிவுகளை அவருக்கு சொல்தல் வேண்டும்:

| இல. | மீறலின் தன்மை | செய்தவர் | குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நடத்தை | நிவாரணம் | நீதிமன்றம் |
|---|---|---|---|---|---|
| **1.** | பாரபட்சம் | அரச அதிகாரி | சட்டத்தினைப் பின்பற்றாமை (காரணங்களை கூறாது கட்டுமானத்தை நிறுத்தும்படி அறிவுறுத்தல் வழங்கியமை | உறுதிகேள் எழுத்தாணை | மேன்முறையீட்டு நீதிமன்றம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மற்றும் குழுவொன்றினால் செய்யப்பட்ட போராட்டம்) | | |
| **2.** | மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல் பாரபட்சம் | அரச அதிகாரி | உங்களுடைய கட்சிக்காரரின் மத அடையாளத்தின் காரணமாக உங்களுடைய கட்சிக்காரரை வேறொரு குழுவினரை விட வித்தியாசமாக நடத்துதல் | அடிப்படை உரிமை (உறுப்புரை 12 மற்றும் 14(1)(உ) / இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு | உச்ச நீதிமன்றம் / இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |

***மத நிறுவனமொன்றின் கட்டுமானம் அல்லது பராமரிப்பு தொடர்பான ஒழுங்குவிதி தொடர்பான மேலதிக எடுத்துக்காட்டுக்கள்:***

***எடுத்துக்காட்டு 1***

லு என்பவர் ஓர் சிறிய கிறிஸ்தவ சபையின் போதகர் என்பதுடன் அவர் தனது தனிப்பட்ட வதிவிடத்தினை வழிபாட்டு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ள எண்ணுகின்றார். லு நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் பிரிவு 8ஒ(1) இன் கீழ் வதிவிட வளாகங்களுக்கான கட்டிடத் திட்டத்திற்குரிய அனுமதியினைப் பெற்றுக் கொள்கின்றார். அவ்விடத்தில் வசித்த வதிவிடவாளர்கள் அவ்வளாகத்தினுள் இடம்பெறுகின்ற நடவடிக்கைகள் மற்றும் சடங்குகள் பொது இடைஞ்சலாக உள்ளது என முறைப்பாடு செய்தமையினால் அனுமதி வழங்கிய அதிகார சபையினால் கட்டுமானப் பணி இடைநிறுத்தப்படுகின்றது. (அத்துடன் வழக்கு கற்கை **இ** இனைப் பார்க்க).

***எடுத்துக்காட்டு 2***

வட மாகாணத்தில் உள்ள ஓர் கிராமத்தில் யு எனும் கோவில் நூற்றாண்டுகளாக இருந்து வருகின்றது. அக்கோவில் காணியில் தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரத்தின்கீழ் காணப்படுகின்ற தொன்மைச் சின்னங்கள் காணப்படுகின்றன. தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரிகள் கோவில் யு அமைந்துள்ள தொல்லியல் இடத்திற்கு செல்கின்றனர். அந்த பிரதேசத்தில் இந்து மற்றும் பௌத்த மத சமுதாயங்களுக்கிடையே புனித இடங்கள் தொடர்பான நீண்டகால முரண்பாடுகள் நிலவுகின்றன. அதிகாரிகள் குறிப்பிட்ட இடம் பௌத்த மத சமுதாயத்திற்கு சொந்தமானது என்றும், அவ்விடத்தில் தொன்மைவாய்ந்த புத்தர் சிலை காணப்பட்டதாகவும் கூறுகின்றனர். பௌத்த புனித இடமொன்றில் ஊடுருவியே கோவில் கட்டப்பட்டுள்ளதென்றும், சிலையினை மீட்டெடுக்கும்பொருட்டு அகழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் கோருகின்றனர். அத்திட்டமானது கோவிலின் தற்போதைய கட்டமைப்பின் ஓர் பகுதியின் நீக்கத்தினைத் தேவைப்படுத்தும். அங்குள்ள இந்து வதிவிடவாளர்கள் கோயிலின் ஓர் பகுதி நீக்கப்படுவதற்கெதிராகப் போராடுகின்றனர் என்பதுடன் சட்ட நிவாரணத்தினை நாடியுள்ளனர்.

***(2) மத நடைமுறை மீதான மட்டுப்பாடுகள்***

மத நடைமுறை மீதான மட்டுப்பாடுகளுக்கான குறிப்பான உதாரணங்கள், 'மத சார்பான ஆடை அணிவதற்கான தடை, இறுதி சடங்கு போன்ற மத சடங்குகளுக்கு தடை, மத போதனைகளுக்கு தடை மற்றும் மத விழாக்கள், ஒன்று கூடல்கள் மற்றும் பண்டிகைகளை ஒழுங்குபடுத்தல்' என்பனவற்றை உள்ளடக்கும்.

**வழக்கு கற்கை ஆ**

இஸ்லாமிய தீவிரவாத குழுவொன்றினால் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலொன்றைத் தொடர்ந்து, அரசாங்கம் அவசரகால நிலைமையினைப் பிரகடனப்படுத்தியதுடன் அவசரகால ஒழுங்குவிதிகளை அறிமுகஞ் செய்தது. அவற்றுள் ஒரு ஒழுங்குவிதியானது, 'ஒரு நபருடைய அடையாளத்தினை அறிந்து கொள்வதற்கு ஏதேனும் முறையில் ஏதேனும் தடையினை ஏற்படுத்தும்வகையில் ஏதேனும் ஆடை, துணி அல்லது வேறு பொருட்களைக் கொண்டு எந்தவொரு நபரும் எந்தவொரு பொது இடத்திலும் முழு முகத்தினை மறைக்கக் கூடாது'


என கூறுகின்றது. நிக்காப் அணிந்திருந்த ஞு எனும் முஸ்லிம் பெண்ணொருவர் சோதனை சாவடியில் நிறுத்தப்படுகின்றார். அவர் அச்சோதனை சாவடியில் அச்சுறுத்தலுக்கும் தொந்தரவிற்கும் உள்ளாக்கப்படுகின்றார்.

**வழக்கு கற்கை ஆ இனை வழிநடத்தல்**

*படிமுறை 1: மீறலைத் தீர்மானித்தல்*

இவ் எடுத்துக்காட்டில், அவசரகால ஒழுங்குவிதியானது நடுநிலையான மொழி பிரயோகத்தினால் ஆக்கப்பட்டுள்ளது. அது பெண்கள் தொடர்பிலோ அல்லது இஸ்லாம் தொடர்பிலோ எவ்வித குறிப்பீடுகளையும் செய்யவில்லை. இருப்பினும், அவ் அவசரகால ஒழுங்குவிதி வெளியிடப்பட்ட சூழமைவினைக் கருத்திற்கொண்டு பார்க்கின்றபோது, நடைமுறையில் அது முழு முகத்தையையும் மறைக்கின்ற இஸ்லாம் மதத்தை சேர்ந்த சில பெண்களின் நடைமுறையினைத் தடுப்பதற்காகவே வெளியிடப்பட்டுள்ளது. ஆகவே, இவ் அவசரகால ஒழுங்குவிதியானது குறிப்பிட்டதொரு மத நடைமுறையினை மறைமுகமாக இலக்கு வைக்கின்ற தன்மையினைக் கொண்டுள்ளது என வாதிட முடியும். ஞு அவரது மத அடையாளத்தின் காரணமாக அச்சுறுத்தப்பட்டுள்ளார் மற்றும் தொந்தரவிற்குள்ளாக்கப்பட்டுள்ளார். கீழே உள்ள உரு 3 ஆனது இச்சம்பவம் தொடர்பான சாத்தியமான அனைத்து மீறல்களையும் மதிப்பீடு செய்வதுடன் எந்நீதிமன்றத்தில் வழக்கினைத் தொடர்வது என்பதனை சட்டத்தரணி மற்றும் கட்சிக்காரர் தீர்மானிப்பதற்கேற்றவகையில் அவற்றை காட்சிப்படுத்துகின்றது.

**உரு 3**




மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல், பாரபட்சம் அல்லது வன்முறைக்கு காரணமாயமைந்த நுட்பமான செயல் யாதென சட்டத்தரணி தீர்மானித்தல் வேண்டும்.

*படிமுறை 2: நீதிமன்றத்தினைத் தெரிவு செய்தல்*

| | | |
|---|---|---|
| I.<br>*மீறலின் தன்மை யாது?* | **சட்டம், ஒழுங்குவிதி அல்லது வழிகாட்டலொன்று** | **ஆ** |
| | வாய்மொழிமூலமான அல்லது எழுத்துமூலமான தொடர்பாடலொன்று | இ |
| | கைது அல்லது அடைத்துவைப்பு | இ |
| | உடல்ரீதியான வன்முறைச் செயலொன்று | இ |
| | **உடல்ரீதியற்ற வன்முறைச் செயலொன்று (அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு)** | **ஆ** |

| | | |
|---|---|---|
| | அரச அதிகாரிகள் | **ஆ** |

| | | |
|---|---|---|
| II.<br><br>மீறலுக்கு பொறுப்பானவர் அல்லது உடந்தையாக இருந்தவர் யார்? | அரச அதிகாரி(கள்)யின் ஒத்துழைப்பு அல்லது ஆதரவுடன் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்(கள்) | இ |
| | அரசின் ஊக்குவிப்புடன் அல்லது சகிப்புத்தன்மையுடன் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்(கள்) (குழுக்களாக அல்லது தனிநபர்களாக) | இ |

சட்டத்தரணி தனது கட்சிக்காரரிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்கின்றபோது, கீழ்வரும் தெரிவுகளை அவருக்கு சொல்தல் வேண்டும்:

| இல. | மீறலின் தன்மை | செய்தவர் | குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நடத்தை | நிவாரணம் | நீதிமன்றம் |
|---|---|---|---|---|---|
| **1.** | மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல் பாரபட்சம் | அரச அதிகாரி | உங்களுடைய கட்சிக்காரரின் மத அடையாளத்தின் காரணமாக உங்களுடைய கட்சிக்காரரை வித்தியாசமாக நடத்துதல் | அடிப்படை உரிமை (உறுப்புரை 12 மற்றும் 14(1)(உ) / இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு | உச்ச நீதிமன்றம் / இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |

**வழக்கு கற்கை இ**


ஞ என்பவர் கிராமமொன்றிலுள்ள போதகர் ஒருவர் ஆவார். அவர் தனது வதிவிடத்தில் நாளாந்தம் பிரார்த்தனைக் கூட்டங்களை செய்ய ஆரம்பித்தார். அதிக எண்ணிக்கையிலான மக்கள் ஞ இன் வதிவிடத்தில் ஒன்றுகூடுவதாக அக்கிராம மக்கள் பொலிஸில் முறைப்பாடு செய்தனர். இவ் ஒன்றுகூடல்கள் அவ்விடத்திலுள்ள வதிவிடவாளர்களுக்கு இடைஞ்சலையும் தொந்தரவினையும் ஏற்படுத்துவதாக அவர்கள் குற்றஞ்சாட்டினர். பல சந்தர்ப்பங்களில், வதிவிடவாளர்கள் நாளாந்த பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு இடையூறு விளைவிப்பதற்காக ஞ இன் இல்லத்திற்கு கற்களை எறிந்துள்ளனர். இவ்விடயம் நீதிவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்படடதன்பேரில், ஞ இன் நடவடிக்கைகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தும் பொருட்டு நீதவான் குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவையின் பிரிவு 98 இன்கீழ் இடைக்கால ஆணையொன்றினை வழங்கியுள்ளார்.

**வழக்கு கற்கை இ இனை வழிநடத்தல்**

*படிமுறை 1: மீறலைத் தீர்மானித்தல்*

இவ் எடுத்துக்காட்டில், பிரார்த்தனை நேரங்களின்போது முறைப்பாட்டாளரின் வீட்டிற்குள் கற்கள் எறியப்பட்டுள்ளன. எவ்வாறெனினும், நீதிவான் நீதிமன்றம் ஞ இன் நடவடிக்கைகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தும் பொருட்டு குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக் கோவையின் பிரிவு 98 இன்கீழ் இடைக்கால ஆணையொன்றினை வழங்கியுள்ளது. கீழே உள்ள உரு 4 ஆனது இச்சம்பவம் தொடர்பான சாத்தியமான அனைத்து மீறல்களையும் மதிப்பீடு செய்வதுடன் எந்நீதிமன்றத்தில் வழக்கினைத் தொடர்வது என்பதனை சட்டத்தரணி மற்றும் கட்சிக்காரர் தீர்மானிப்பதற்கேற்றவகையில் அவற்றை காட்சிப்படுத்துகின்றது.

**உரு 4**




மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல், பாரபட்சம் அல்லது வன்முறைக்கு காரணமாயமைந்த நுட்பமான செயல் யாதென சட்டத்தரணி தீர்மானித்தல் வேண்டும்.

*படிமுறை 2: நீதிமன்றத்தினைத் தெரிவு செய்தல்*

| | | |
|---|---|---|
| I.<br>மீறலின் தன்மை யாது? | சட்டம், ஒழுங்குவிதி அல்லது வழிகாட்டலொன்று | இ |
| | **வாய்மொழிமூலமான அல்லது எழுத்துமூலமான தொடர்பாடலொன்று** | **ஆ** |
| | கைது அல்லது அடைத்துவைப்பு | இ |
| | **உடல்ரீதியான வன்முறைச் செயலொன்று** | **ஆ** |
| | உடல்ரீதியற்ற வன்முறைச் செயலொன்று (அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு) | இ |

| | | |
|---|---|---|
| II.<br>மீறலுக்கு பொறுப்பானவர் அல்லது உடந்தையாக இருந்தவர் யார்? | அரச அதிகாரிகள் | **ஆ** |
| | அரச அதிகாரி(கள்)யின் ஒத்துழைப்பு அல்லது ஆதரவுடன் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்(கள்) | இ |
| | ***அரசின் ஊக்குவிப்புடன் அல்லது சகிப்புத்தன்மையுடன் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்(கள்) (குழுக்களாக அல்லது தனிநபர்களாக)*** | **ஆ** |

சட்டத்தரணி தனது கட்சிக்காரரிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்கின்றபோது, கீழ்வரும் தெரிவுகளை அவருக்கு சொல்தல் வேண்டும்:

| இல. | மீறலின் தன்மை | செய்தவர் | குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நடத்தை | நிவாரணம் | நீதிமன்றம் |
|---|---|---|---|---|---|
| **1.** | நீதவானால் வழங்கப்பட்டுள்ள இடைக்கால ஆணையைக் கொண்டு பார்க்கின்றபோது, குறித்த ஆணைக்கு எதிராக மேன்முறையீடு செய்யுமாறு முறைப்பாட்டாளருக்கு ஆலோசனை வழங்கலாம். | | | பிரயோகத்தினை மீளாய்வு செய்தல் | மேல் நீதிமன்றம் |
| **2.** | மத வன்முறை | அரசின் ஊக்குவிப்புடன் அல்லது சகிப்புத்தன்மையுடன் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்(கள்) (குழுக்களாக | தாக்குதல், ஆதனச் சேதம், அச்சுறுத்தல், மிரட்டல் | தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவுகள் 340-349இ 408-421இ 483-487, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் | மேல் நீதிமன்றம் அல்லது நீதிவான் நீதிமன்றம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | அல்லது தனிநபர்களாக) | | கோவையின் பிரிவுகள் 81 அல்லது 98 அல்லது குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச் சட்டத்தின் பிரிவு 3 இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள குற்றவியல் வழக்குகள் | |
| **3.** | மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல் பாரபட்சம் | அரச அதிகாரி | உங்களுடைய கட்சிக்காரரின் மத அடையாளத்தின் காரணமாக உங்களுடைய கட்சிக்காரரை வித்தியாசமாக நடத்துதல் | அடிப்படை உரிமை (உறுப்புரை 12 மற்றும் 14(1)(உ) / இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு | உச்ச நீதிமன்றம் / இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |

**மத நடைமுறை மீதான மட்டுப்பாடுகளுக்கான மேலதிக உதாரணங்கள்**

### *எடுத்துக்காட்டு 3*

முறைப்பாட்டாளர்களுக்கு (பிரதேச பள்ளிவாயிலின் அங்கத்தவர்கள்) பொலிஸ் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 80 இன்கீழ் ஒலிபெருக்கிக்கான பாவனை மறுக்கப்பட்டது. பள்ளிவாயிலிலிருந்து தொழுகைக்கான அழைப்பு விடுவதற்காக ஒலிபெருக்கியின் மட்டுப்பாடுகளற்ற பாவனைக்கான அனுமதியே கோரப்பட்டது. ஒலிபெருக்கிகளின் மட்டுப்பாடுகளற்ற பாவனை ஏனைய மதங்களைச் சேர்ந்த நபர்களை வலுக்கட்டாயமாகக் கேட்க வைக்கும் என்பதுடன் ஒலிபெருக்கிகளில் இருந்து வரும் மிகையான சத்தம் ஆரோக்கியத்திலும் தாக்கம் செலுத்தும் என பொலிஸ் அதிகாரிகள் கூறினார்கள்.

### *எடுத்துக்காட்டு 4*

னு என்பவர் யெகோவாவின் சாட்சிகள் எனும் மதப் பிரிவைச் சேர்ந்தவர். யெகோவாவின் சாட்சிகளின் சித்தாந்தங்கள் மதப் பரப்புகைக்காக வீடு வீடாகச் செல்லுமாறு அவர்களைத் தேவைப்படுத்துகின்றது. னு என்பவர் அநுராதபுரத்திலுள்ள ஓர் கிராமத்திற்கு மதப்பணியின் நிமித்தம் செல்கின்றார் என்பதுடன் மத ஆவணங்களை பகிர்ந்தளிக்கின்றார். பௌத்த பிக்குகள் பலர் மற்றும் ஏனைய கிராமவாசிகள் அவ்வீட்டிற்குள் நுழைந்து னு பலவந்தமாக நபர்களை மதம் மாற்றுவதாக குற்றஞ்சாட்டுகின்றனர். பின்னர் னு பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்படுவதுடன் அங்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பௌத்த பிக்குகள் பலரால் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றார். னு கைது செய்யப்படுகின்றார் என்பதுடன் குற்றவியல் அச்சுறுத்தல் மற்றும் குற்றவியல் அத்துமீறல் ஆகிய குற்றங்களைப் புரிந்துள்ளார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஓர் இரவு கட்டுக்காவலில் வைக்கப்படுகின்றார். விசாரணைகளின் முடிவினைத் தொடர்ந்து னு இற்கு எதிராக வழக்கெதுவும் பதிவு செய்யப்படவில்லை என்பதுடன், னு சட்ட நிவாரணத்தினை நாடுகின்றார்.

### *எடுத்துக்காட்டு 5*

சு எனும் கிறிஸ்தவர் திடீர் சுகவீனம் காரணமாக இறக்கின்றார் என்பதுடன் அவருடைய உடலை பொது மயானத்தில் அடக்கம் செய்வதற்கு அவருடைய குடும்பம் முடிவு செய்கின்றது. இறுதிக் கிரியைகள்

நடைபெற்றுக் கொண்டிருக்கின்றபோது, 100 பேருடைய கும்பலொன்று அம்மயானத்தில் கிறிஸ்தவர்களை அடக்கம் செய்ய முடியாது என கூறி அதற்கு இடையூறு செய்கின்றனர். இறுதி கிரியைகளுக்காகக் கூடியிருந்தவர்களை அக்குழுவினர் தாக்குகின்றனர். அங்கு பிரசன்னமாயிருந்த பொலிஸாரால் அச்சம்பவத்தினைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியவில்லை. பல மணித்தியாலங்களுக்கு பின்னர், கிராமவாசிகளால் வழங்கப்பட்ட (கும்பலுக்கு ஆதரவாக இருந்தவர்கள்) அழுத்தத்தின் காரணமாக 15 கிலோ மீற்றல் தொலைவில் உள்ள ஓர் இடத்தில் பொலிஸ் பாதுகாப்புடன் இறுதி கிரியைகளை செய்யுமாறு சு இன் குடும்பம் கட்டாயப்படுத்தப்பட்டது.

### *(3) மத அடையாளத்தினை அடிப்படையாகக் கொண்ட பாரபட்சம்*

மத அடையாளத்தினை அடிப்படையாகக் கொண்ட பாரபட்சத்திற்கான உதாரணங்களாக, ‘மத அடிப்படையில் அடிப்படை சேவைகளுக்கான அணுகுதலை மறுத்தல், தொழிலில் பாரபட்சம் மற்றும் பாடசாலை அனுமதியில் பாரபட்சம்’ என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

**வழக்கு கற்கை ஈ**


முறைப்பாட்டாளர் அரசாங்கப் பாடசாலையொன்றின் ஆசிரியர் ஆவார். அவர் பாடசாலைக்கு அபாயா அணிந்து செல்வதனால் அவருடைய தொழில் முடிவுறுத்தப்பட்டது. தொழிற்தருநர், ‘பாடசாலையில் ஓர் நடுநிலையான சூழலைப் பின்பற்ற தான் விரும்புவதாகவும், ஆசிரியர்கள் அபாயா அணிகின்றபோது அது மாணவர்கள் மீது செல்வாக்கு செலுத்தும் என்பதுடன் அவர்கள் தங்களுடைய மதங்களைப் பின்பற்றுவதற்கான உரிமையில் அல்லது இயலுமையில் அது தாக்கம் செலுத்தும்’ என கூறுகின்றார்.

**வழக்கு கற்கை ஈ இனை வழிநடத்தல்**

*படிமுறை 1: மீறலைத் தீர்மானித்தல்*

இவ் எடுத்துக்காட்டில், முறைப்பாட்டாளரின் தொழில் முடிவுறுத்தப்படமையானது பணிக்கு அபாயா அணிய வேண்டுமென்ற அவரது தீர்மானத்துடன் நேரடியாகத் தொடர்புற்றுள்ளது. தன்னுடைய மத நம்பிக்கைகளை வெளிப்படுத்துகின்ற ஆடைகளை அணிவதற்கான முறைப்பாட்டாளரின் உரிமையினை மறுக்கின்றவொன்றாக இதனைப்பார்க்க இயலும். சமய பாடத்தைத் தவிர, அரச பாடத்திட்டமானது மத சார்பற்றதாகவே காணப்படுகின்றது. ஆகவே, ஆசிரியரின் ஆடை மாணவர்களிலோ அல்லது தங்களுடைய மதங்களைப் பின்பற்றுவதற்கான மாணவர்களின் இயலுமையிலோ கணிசமானத் தாக்கத்தினைச் செலுத்தாது என சட்டத்தரணி வாதிட முடியும். கீழே உள்ள உரு 5 ஆனது இச்சம்பவம் தொடர்பான சாத்தியமான அனைத்து மீறல்களையும் மதிப்பீடு செய்வதுடன் எந்நீதிமன்றத்தில் வழக்கினைத் தொடர்வது என்பதனை சட்டத்தரணி மற்றும் கட்சிக்காரர் தீர்மானிப்பதற்கேற்றவகையில் அவற்றை காட்சிப்படுத்துகின்றது.

**உரு 5**




மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல், பாரபட்சம் அல்லது வன்முறைக்கு காரணமாயமைந்த நுட்பமான செயல் யாதென சட்டத்தரணி தீர்மானித்தல் வேண்டும்.

*படிமுறை 2: நீதிமன்றத்தினைத் தெரிவு செய்தல்*

| | | |
|---|---|---|
| I.<br>மீறலின் தன்மை யாது? | சட்டம், ஒழுங்குவிதி அல்லது வழிகாட்டலொன்று | இ |
| | **வாய்மொழிமூலமான அல்லது எழுத்துமூலமான தொடர்பாடலொன்று** | **ஆ** |
| | கைது அல்லது அடைத்துவைப்பு | இ |
| | உடல்ரீதியான வன்முறைச் செயலொன்று | இ |
| | உடல்ரீதியற்ற வன்முறைச் செயலொன்று (அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு) | இ |

| | | |
|---|---|---|
| II.<br>மீறலுக்கு பொறுப்பானவர் அல்லது உடந்தையாக இருந்தவர் யார்? | **அரச அதிகாரிகள்** | **ஆ** |
| | அரச அதிகாரி(கள்)யின் ஒத்துழைப்பு அல்லது ஆதரவுடன் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்(கள்) | இ |
| | அரசின் ஊக்குவிப்புடன் அல்லது சகிப்புத்தன்மையுடன் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்(கள்) (குழுக்களாக அல்லது தனிநபர்களாக) | இ |

சட்டத்தரணி தனது கட்சிக்காரரிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்கின்றபோது, கீழ்வரும் தெரிவுகளை அவருக்கு சொல்தல் வேண்டும்:

| இல. | மீறலின் தன்மை | செய்தவர் | குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நடத்தை | நிவாரணம் | நீதிமன்றம் |
|---|---|---|---|---|---|
| **1.** | மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல் பாரபட்சம் | அரச அதிகாரி | உங்களுடைய கட்சிக்காரரின் மத அடையாளத்தின் காரணமாக உங்களுடைய கட்சிக்காரரை வித்தியாசமாக நடத்துதல் | அடிப்படை உரிமை (உறுப்புரை 12 மற்றும் 14(1)(உ) / இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு | உச்ச நீதிமன்றம் / இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |

**மத அடையாளத்தினை அடிப்படையாகக் கொண்ட பாரபட்சத்திற்கான மேலதிக எடுத்துக்காட்டுக்கள்**

***எடுத்துக்காட்டு 6***

முறைப்பாட்டாளர் பௌத்த மதத்தைச் சேர்ந்த ஒருவர் என்பதுடன் அவர் தனது பிள்ளையை தனது வதிவிடத்திற்கு அண்மையில் உள்ள உதவியளிக்கப்பட்ட (அதாவது, அரச உதவி மற்றும் நன்கொடை பெறும் பாடசாலைகள்) கத்தோலிக்க பாடசாலையொன்றில் சேர்ப்பதற்கு விரும்புகின்றார். பௌத்த பெற்றோர்களினால் செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை பாடசாலைக்குரிய பௌத்த மாணவர்களுக்கான ஒதுக்கீட்டினைத் தாண்டிவிட்டதனால் அப்பிள்ளைக்கான தரம் ஒன்றிற்கான பாடசாலை அனுமதி மறுக்கப்படுகின்றது. கல்வி அமைச்சினால் பாடசாலை அனுமதி தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தின் வாசகம் 3.2 இனை அமுல்படுத்துவதற்கு பாடசாலை தவறியுள்ளது என முறைப்பாட்டாளர் கூறுகின்றார்.

### *(4) மத அடையாளத்துடன் தொடர்புடைய வன்முறை*

மத அடையாளத்துடன் தொடர்புடைய வன்முறை என்பது நபர்கள் அல்லது ஆதனத்திற்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் மற்றும் அவ்வன்முறையினைத் தடுப்பதற்கான அரசின் செயற்பாட்டின்மை என்பனவற்றை உள்ளடக்கும்.

**வழக்கு கற்கை உ**


ஓர் வாகன நெரிசல் சம்பவத்தினைத் தொடர்ந்து நான்கு முஸ்லிம் நபர்களால் ஒரு சிங்கள ஆண் ஒருவர் தாக்குதலுக்கு உள்ளாகி பின் அத்தாக்குதலின் விளைவாக மரணித்ததனைத் தொடர்ந்து அதற்கு பழிவாங்கும் முகமாக மாவட்டத்தில் உள்ள பல நகரங்களில் கும்பல்கள் முஸ்லிம்களுக்கு சொந்தமான வியாபார நிலையங்களையும் வழிபாட்டிடங்களையும் தாக்கியிருந்தனர். கும்பல் முஸ்லிம்களுக்கு சொந்தமான வியாபார நிலையங்களை கொள்ளையடித்ததுடன் அவற்றுக்கு தீ வைத்தது. சில முஸ்லிம் கடை உரிமையாளர்கள் அக்கும்பலினால் தாக்கப்பட்டனர். சில வன்முறைச் சம்பவங்கள் பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் இடம்பெற்றது என்பதுடன் அவர்கள் தலையீடு செய்யத் தவறினர்.

**வழக்கு கற்கை உ இனை வழிநடத்தல்**

*படிமுறை 1: மீறலைத் தீர்மானித்தல்*

இவ் எடுத்துக்காட்டில், குற்றவாளிகள் தாக்குதல், தீவைப்பு, திருட்டு, ஆதனச் சேதம், குற்றவியல் அத்ததுமீறல் மற்றும் அமைதிக்கு குந்தகம் விளைவித்தல் என பல்வேறுபட்ட குற்றங்களைப் புரிந்திருந்தனர். கீழே உள்ள உரு 6 ஆனது இச்சம்பவம் தொடர்பான சாத்தியமான அனைத்து மீறல்களையும் மதிப்பீடு செய்வதுடன் எந்நீதிமன்றத்தில் வழக்கினைத் தொடர்வது என்பதனை சட்டத்தரணி மற்றும் கட்சிக்காரர் தீர்மானிப்பதற்கேற்றவகையில் அவற்றை காட்சிப்படுத்துகின்றது.

**உரு 6**




மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல், பாரபட்சம் அல்லது வன்முறைக்கு காரணமாயமைந்த நுட்பமான செயல் யாதென சட்டத்தரணி தீர்மானித்தல் வேண்டும்.

*படிமுறை 2: நீதிமன்றத்தினைத் தெரிவு செய்தல்*

| | | |
|---|---|---|
| I.<br><br>மீறலின் தன்மை யாது? | சட்டம், ஒழுங்குவிதி அல்லது வழிகாட்டலொன்று | இ |
| | வாய்மொழிமூலமான அல்லது எழுத்துமூலமான தொடர்பாடலொன்று | இ |
| | கைது அல்லது அடைத்துவைப்பு | இ |

| | | |
|---|---|---|
| | **உடல்ரீதியான வன்முறைச் செயலொன்று** | **ஆ** |
| | உடல்ரீதியற்ற வன்முறைச் செயலொன்று (அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு) | இ |

| | | |
|---|---|---|
| II. மீறலுக்கு பொறுப்பானவர் அல்லது உடந்தையாக இருந்தவர் யார்? | **அரச அதிகாரிகள்** | **ஆ** |
| | அரச அதிகாரி(கள்)யின் ஒத்துழைப்பு அல்லது ஆதரவுடன் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்(கள்) | இ |
| | **அரசின் ஊக்குவிப்புடன் அல்லது சகிப்புத்தன்மையுடன் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்(கள்) (குழுக்களாக அல்லது தனிநபர்களாக)** | **ஆ** |

சட்டத்தரணி தனது கட்சிக்காரரிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்கின்றபோது, கீழ்வரும் தெரிவுகளை அவருக்கு சொல்லல் வேண்டும்:

| இல. | மீறலின் தன்மை | செய்தவர் | குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நடத்தை | நிவாரணம் | நீதிமன்றம் |
|---|---|---|---|---|---|
| **1.** | மத வன்முறை | அரசின் ஊக்குவிப்புடன் அல்லது சகிப்புத்தன்மையுடன் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்(கள்) (குழுக்களாக அல்லது தனிநபர்களாக) | தாக்குதல், தீவைப்பு, திருட்டு, ஆதனச் சேதம், குற்றவியல் அத்தமீறல், அமைதிக்கு குந்தகம் விளைவித்தல் மற்றும் வன்முறைக்கான தூண்டுதல் | தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவுகள் 340-349இ 366-371இ 408-421இ 427-434இ 483-487, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் பிரிவுகள் 81 அல்லது 98 அல்லது குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச் சட்டத்தின் பிரிவு 3 இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள குற்றவியல் வழக்குகள் | மேல் நீதிமன்றம் அல்லது நீதிவான் நீதிமன்றம் |
| **2** | மத பாரபட்சம் | அரச செயற்பாட்டாளர் (பொலிஸ்) | பொலிஸ் செயற்பாதிருந்தமை | அடிப்படை உரிமை (உறுப்புரை 12).'. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு | உச்ச நீதிமன்றம் .'. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |

**மத அடையாளத்துடன் தொடர்புடைய வன்முறை தொடர்பான மேலதிக எடுத்துக்காட்டுக்கள்**

***எடுத்துக்காட்டு 7***

பெண் போதகர் ஒருவரும் ஏனைய பலரும் வீடொன்றினுள் மாலை நேர பிரார்த்தனைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது தாக்கப்பட்டனர். தளபாடங்களுக்கு பாரிய சேதம் ஏற்படுத்தப்பட்டதுடன் வீட்டின் உட்புறமும் சேதமாக்கப்பட்டது. அதன்பின்னர் அவர்கள் வீட்டிற்கு வெளியே இழுத்துவரப்பட்டு முழங்காலிடப்படச் செய்தனர். அதன்பின்னர், அவர்கள் பொலிஸ் நிலையத்திற்கு நடை பவனியாக அழைத்துச் செல்லப்பட்டதுடன் குற்றவாளிகள் போதகரை பகிரங்கமாக விபச்சாரி என கூறினர். இத்தாக்குதலுக்கு முன்னர் போதகருக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தன என்பதுடன் இது தொடர்பில் போதகர் அப்பிரதேச பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

## *(5) பேச்சுடன் தொடர்புடையக் குற்றங்கள்*

நபர்கள் மத சிறுபான்மையினருக்கு எதிராக வன்முறையினைத் தூண்டுகின்றபோது குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச் சட்டம் வேண்டப்படலாம். எவ்வாறெனினும், நடைமுறையில், இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச் சட்டம், தண்டனைக் கோவை, பொலிஸ் கட்டளைச் சட்டம் மற்றும் கணினிவழிக் குற்றங்கள் சட்டம் என்பன சிறுபான்மை மதத்தினைச் சேர்ந்தோர் பேசும் விடயங்களுக்காக அவர்களை இலக்கு வைக்கவே பயன்பட்டு வருகின்றன.

### *5.1 பேச்சுடன் தொடர்புடைய குற்றங்கள் (கட்சிக்காரர் பிரதிவாதியாய் உள்ளபோது)*

***எடுத்துக்காட்டு 8***

ஞ எனும் கவிஞர் கவிதையொன்றை எழுதி முகநூலில் பதிவிடுகின்றார். இக்கற்பனைக் கவிதையானது பௌத்த பிக்கு ஒருவரால் புரியப்பட்ட பாலியல் துஷ்பிரயோகத்தினை மையப்பொருளாகக் கொண்டு அமைந்திருந்தது. பௌத்த பிக்குமார் குழுவொன்றினால் செய்யப்பட்ட முறைப்பாட்டினைத் தொடர்ந்து, ஞ குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச் சட்டத்தின் பிரிவு 3 மற்றும் தண்டனைக் கோவையின் பிரிவு 291 இன்கீழ் கைது செய்யப்பப்பட்டார்.

***எடுத்துக்காட்டு 9***

சு என்ற முஸ்லிம் பெண் கப்பலின் சுக்கானின் இலச்சினையினால் அலங்கரிக்கப்பட்டிருந்த ஆடையயொன்றினை அணிந்திருந்தமையினால் கைது செய்யப்பட்டார். கைது செய்த அதிகாரி அவ் இலச்சினை பௌத்த புனித சின்னமான தர்மசக்கரத்தினை ஒத்திருப்பதாகவும் அது பொது மக்கள் மத்தியில் அமைதியின்மையினைத் தோற்றுவித்ததாகவும் கூறினார்.

### *5.2 பேச்சுடன் தொடர்புடைய குற்றங்கள் (கட்சிக்காரர் முறைபாட்டாளராய் உள்ளபோது)*

குறிப்பிட்ட வெளியீடுகள் அல்லது அச்சினால் வெளியிடப்படுகின்றத் தகவல்கள், இலத்திரனியல் அல்லது சமூக ஊடகம் அல்லது பொது ஒன்றுகூடல்களில் செய்யப்பட்ட பேச்சுக்கள் காரணமாக கட்சிக்காரரொருவரும் பாதிக்கப்பட்டவராய் உள்ள சந்தர்ப்பங்களும் காணப்படலாம்.

**வழக்கு கற்கை ஊ**

முஸ்லிம் கடை உரிமையாளர் ஒருவருக்கும் சிங்கள வாடிக்கையாளர் ஒருவருக்கும் இடையே முரண்பாடொன்று ஏற்பட்டதுடன் அதன் விளைவாக சிங்கள வாடிக்கையாளர் முஸ்லிம் கடை உரிமையாளரைத் தாக்கியிருந்தார். முஸ்லிம் கடை உரிமையாளருக்கு பாரதூரமான காயம் விளைவித்தமைக்காக சிங்கள வாடிக்கையாளர் கைது செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து உடனடி பின்பதாக, இன-மத போராளி அமைப்பொன்று முஸ்லிம்களின் மோசடியான வியாபார நடவடிக்கைகள் பற்றி கேள்வி எழுப்பியமைக்காக ஒரு அப்பாவி சிங்களவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்ற வதந்தியொன்றை வட்ஸ்அப் மூலமாக பரப்பியது. அடுத்த நாள் அப்பொலிஸ் நிலையத்திற்கு வெளியே பெரிய


கூட்டமொன்று ஒன்று கூடி அச்சிங்கள வாடிக்கையாளரை விடுவிக்கும்படி கோரியது. அப்போராளி அமைப்பின் தலைவர் பொலிஸ் நிலையத்தில் வைத்து அங்கு ஒன்று கூடியிருந்தவர்களிடம் பேசியபோது, 'மோசடியான முஸ்லிம் வியாபாரங்களை முடிவிற்கு கொண்டு வருவதற்கு நாட்டுப்பற்றுள்ள அனைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென' கேட்டுக் கொண்டார். அதன் பின்னர், உடனடி பின்பதாக, அக்கூட்டம் அந்நகரத்தின் வாயிலாக சென்று அடையாளம் காணத்தகு முஸ்லிம்களுக்கு சொந்தமான வியாபார இடங்களைத் தாக்க ஆரம்பித்தது. முஸ்லிம்களுக்கு சொந்தமான பல வியாபார நிலையங்களுக்கு தீ வைக்கப்பட்டன, பள்ளிவாசலொன்று சேதமாக்கப்பட்டது என்பதுடன் தீவைப்பினால் ஏற்பட்ட தாக்குதல் மற்றும் காயங்களின் காரணமாக பல முஸ்லிம் நபர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். காயங்களை அனுபவித்த மற்றும் தன்னுடைய வியாபாரத்தில் சேதங்களை அனுபவித்த முஸ்லிம் சமுதாயத்தினைச் சேர்ந்த ஒரு நபரே முறைப்பாட்டாளர் ஆவார். அவர் குறிப்பாக வன்முறையின் தூண்டுதலுக்கெதிரான நிவாரணத்தினை நாடினார்.

**வழக்கு கற்கை ஊ இனை வழிநடத்தல்**

*படிமுறை 1: மீறலைத் தீர்மானித்தல்*

இவ் எடுத்துக்காட்டில், குற்றவாளிகள் நிகழ்வொன்றினை (முஸ்லிம் கடை உரிமையாளர் மற்றும் சிங்கள வாடிக்கையாளர் ஒருவருக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு) முஸ்லிம்களுக்கு சொந்தமான வியாபாரம் இடம்பெறுகின்ற ஒரு பிரதேசத்திற்கு எதிரான வன்முறை பிரச்சாரமொன்றினை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பொன்றாகப் பயன்படுத்தியிருந்தனர். அவர்கள் ஆதனச் சேதம் மற்றும் தாக்குதல் என்பனவற்றை நிகழ்த்தியிருந்தனர். கீழே உள்ள உரு 7 ஆனது இச்சம்பவம் தொடர்பான சாத்தியமான அனைத்து மீறல்களையும் மதிப்பீடு செய்வதுடன் எந்நீதிமன்றத்தில் வழக்கினைத் தொடர்வது என்பதனை சட்டத்தரணி மற்றும் கட்சிக்காரர் தீர்மானிப்பதற்கேற்றவகையில் அவற்றை காட்சிப்படுத்துகின்றது.

**உரு 7**




மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல், பாரபட்சம் அல்லது வன்முறைக்கு காரணமாயமைந்த நுட்பமான செயல் யாதென சட்டத்தரணி தீர்மானித்தல் வேண்டும்.

*படிமுறை 2: நீதிமன்றத்தினைத் தெரிவு செய்தல்*

| | | |
|---|---|---|
| I. மீறலின் தன்மை யாது? | சட்டம், ஒழுங்குவிதி அல்லது வழிகாட்டலொன்று | இ |
| | **வாய்மொழிமூலமான அல்லது எழுத்துமூலமான தொடர்பாடலொன்று** | **ஆ** |
| | கைது அல்லது அடைத்துவைப்பு | இ |
| | **உடல்ரீதியான வன்முறைச் செயலொன்று** | **ஆ** |
| | **உடல்ரீதியற்ற வன்முறைச் செயலொன்று (அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு)** | **ஆ** |

| | | |
|---|---|---|
| II. மீறலுக்கு பொறுப்பானவர் அல்லது உடந்தையாக இருந்தவர் யார்? | அரச அதிகாரிகள் | இ |
| | அரச அதிகாரி(கள்)யின் ஒத்துழைப்பு அல்லது ஆதரவுடன் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்(கள்) | இ |
| | **அரசின் ஊக்குவிப்புடன் அல்லது சகிப்புத்தன்மையுடன் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்(கள்) (குழுக்களாக அல்லது தனிநபர்களாக)** | **ஆ** |

சட்டத்தரணி தனது கட்சிக்காரரிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்கின்றபோது, கீழ்வரும் தெரிவுகளை அவருக்கு சொல்தல் வேண்டும்:

| இல. | மீறலின் தன்மை | செய்தவர் | குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நடத்தை | நிவாரணம் | நீதிமன்றம் |
|---|---|---|---|---|---|
| **1.** | மத வன்முறை | அரசின் ஊக்குவிப்புடன் அல்லது சகிப்புத்தன்மையுடன் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்(கள்) (குழுக்களாக அல்லது தனிநபர்களாக) | தாக்குதல், தீவைப்பு, திருட்டு, ஆதனச் சேதம், குற்றவியல் அத்தமீறல், அமைதிக்கு குந்தகம் விளைவித்தல் மற்றும் வன்முறைக்கான தூண்டுதல் | குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச் சட்டத்தின் பிரிவு 3 | மேல் நீதிமன்றம் |

**உ. குற்றவாளி அல்லது பிரதிவாதிக்காக பிரசன்னமாதல்**

சட்டத்தரணி குற்றவாளிக்காக அல்லது பிரதிவாதிக்காக பிரசன்னமாயின், நீதிமன்றம் யாதென ஏனைய தரப்பு ஏற்கனவே தீர்மானித்திருக்கும். எவ்வாறெனினும், முறைப்பாட்டின் தன்மையின் அடிப்படையில், அங்கு மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறலொன்று (மேலே கலந்துரையாடப்பட்டது) அல்லது மத பாரபட்சத்திற்கான செயலொன்று இடம்பெற்றுள்ளதா என்பதனைத் தீர்மானிப்பதற்கான மதிப்பீடொன்றினை மேற்கொள்ள இயலும்.

பதியப்பட்டுள்ள வழக்கிற்கு சட்டத்தில் எவ்வித அடிப்படைகளுமின்றி, உங்களுடைய கட்சிக்காரர் விடுதலை செய்யப்பட்டால் அல்லது விடுவிக்கப்பட்டால், தீங்கான வழக்குத் தொடர்விற்காக சிவில் வழக்கொன்றினைப் பதிவு செய்து, கோரிக்கைக்கான கடிதமொன்றினை அனுப்பலாம்.

இலங்கையில் தீங்கான வழக்குத் தொடர்வு பற்றிய விடயமானது ரோமன் டச்சு சட்டத்தின்கீழ் காணப்படுகின்ற *actio injuriarum* (ஒருவரின் கௌவரம் மற்றும் புகழ் மாத்திரமல்லாது அவரது உடற்சார் கௌரவமும் பாதுகாக்கப்பட வேண்டும்) என்ற கோட்பாடுகளினால் ஆளப்படுகின்றது. *Silva v Silva* என்ற வழக்கில்[22] உச்ச நீதிமன்றமானது நிரூபிக்கும் சுமை வாதியினைச் சார்ந்தது (அதாவது, முன்னாள்

[22] [2002] 2 SLR 29.

குற்றவாளி) என்றும், அவர் கீழ்வருவனவற்றை சமநிலையான சான்றுகளின் அடிப்படையில் நிரூபிக்க வேண்டுமென தீர்ப்பளித்தது. (குறிப்பு: வலிதான கோரிக்கையொன்று செய்யப்பட முடியுமா என்பதனை மதிப்பிடும்பொருட்டு கீழ்வரும் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என சட்டத்தரணி பார்க்க இயலும்):

i. உங்களுடைய கட்சிக்காரர் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டு விட்டாரா அல்லது விடுவிக்கப்ட்டுள்ளாரா?

ii. வழக்குத் தொடர்வில் பொய்யான குற்றச்சாட்டு ஏதும் காணப்பட்டதா?

iii. பகிரங்க நீதியினை அடைந்து கொள்வதற்காக அல்லாமல் தீங்கெண்ணத்துடன் அல்லது *யனைஅழ ைதெரசயைினெை (தீங்கான நோக்கத்திற்காக தூண்டப்பட்டது)* உடனா வழக்கு தொடரப்பட்டது?

iv. அத்தகைய நடவடிக்கைக்கான நியாயமான தேவை அல்லது உத்தேசமான காரணம் காணப்பட்டதா?

தீங்கான வழக்குத்தொடர்வு தொடர்பான கோரிக்கையில் வெற்றிகொள்ளும் பொருட்டு, கோரப்பட்ட நிவாரணத்திற்கு நிகழ்வு அடிப்படையிலும் சட்ட அடிப்படையிலும் வாதி உரித்துடையவராவார் என்பதனை வாதி நிரூபிக்க வேண்டும்.[23]

[23] See *Karunaratne v Karunaratne* 63 NLR 365; *Kalu Banda v Rajakaruna* [2002] 3 SLR 44; *Saravanamuttu Vs Kanagasabai* 43 NLR 357; *Hendrick Appuhamy Vs Matto Singho* 44 NLR 459; *Pathirage Don Abeyratne v Gamage Don Chandradasa, C.A. No. 818/97 (F) decided on 23 June 2011; Tewari Vs Bhagat Singh* 24 TLR 884. For further reference

# ஊடகங்களைக் கையாளுதல்

## *5. ஊடகங்களைக் கையாளுதல்*

*இப்பரிவானது மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் தொடர்புடைய வழக்குகள் தொடர்பாக ஊடகங்களுடன் எவ்வாறு ஊடாடலை செய்வது என்பது தொடர்பான வழிகாட்டல்களை வழங்குகின்றது.*[24] *கீழுள்ள பட்டியலானது ஊடகங்களுடன் ஊடாடுகை செய்கின்றபோது செய்ய வேண்டிய மற்றும் செய்யக் கூடாத விடயங்களை எடுத்துக் காட்டுகின்றது.*

**செய்ய வேண்டியவை**

- *ஊடக நபர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருங்கள்: நீதிமன்றத்திலுள்ள அறிக்கையிடுநர் உங்களுடைய கருத்தின்றியே வழக்கினைப் பற்றி எழுதுவதற்கான உயர் அளவான சாத்தியப்பாடு உண்டு.*
- *ஊடக நபர்களுடன் தொடர்பாடல் செய்வதற்கு முன்னர் நீதிமன்றத் திகதிக்கு முன்பதாகவே ஊடகத்திற்கு நீங்கள் சொல்லப் போகின்ற அறிக்கையினைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள் (ஊடக அறிக்கைகள் பொதுவாக நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உடனடி பின்பதாக பெற்றுக் கொள்ளப்படும்)*
- *முடியுமாயின் வாசகங்களை எழுத்தில் வழங்குகின்ற தெரிவினைத் தெரிவு செய்யுங்கள். இத்தெரிவானது நீங்களும் உங்களுடைய குழுவும் உங்களது பதில்களை ஆழமாக சிந்திப்பதனை அனுமதிக்கும் என்பதுடன் ஊடகங்களில் வழக்கு தொடர்பான விடயங்களை உங்களால் கட்டுப்படுத்த முடியும். அறிக்கைகளை எழுத்தில் வழங்குகின்ற தெரிவினைத் தெரிவு செய்தலானது நீங்கள் உள்ளடக்க நினைக்கின்ற அனைத்து விடயங்களை உள்ளடக்குவதனை அனுமதிக்கின்ற அதேவேளை, ஊடகவியலாளர் தரப்பில் நிகழக்கூடிய பிழைகளையும் தவிர்க்கும்.*
- *நீங்கள் ஊடகங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு முன்பு, அத்தகைய தொடர்பினையும், அத்தகைய தொடர்பு உங்களது கட்சிக்காரரின் அக்கறைகளை மேம்படுத்தும் என்பதனையும் கட்சிக்காரருக்கு அறிவிக்கும் பொருட்டு அது தொடர்பாகக் கட்சிக்காரருடன் கலந்துரையாடுங்கள்.*

**செய்யக்கூடாதவை**

- *ஒழுக்க நியமங்களை மீற வேண்டாம். உதாரணமாக, உச்ச நீதிமன்ற விதிகள் 1988 (சட்டத்தரணிகளுக்கான நடத்தை மற்றும் நெறிமுறை) இல் சொல்லப்பட்டுள்ள விதிகள்.*
    - *சட்டத்தரணியொருவர் தன்னுடைய கட்சிக்காரரொருவடனான அனைத்து நடவடிக்கைகளிலும், அவருக்கு வழங்குகின்ற ஆலோசனையிலும் முழுமையான வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.*[25]
    - *சட்டத்தரணியொருவர் தன்னுடைய கட்சிக்காரரொருவருக்கு தீங்கான மற்றும் ∴அல்லது குந்தகம் விளைவிக்கக்கூடிய முறையில் செயற்பட கூடாது.*[26]
    - *சட்டத்தரணியொருவர் தனது கட்சிக்காரரின் வியாபாரம் மற்றும் விவகாரங்கள் தொடர்பாகக் கட்சிக்காரரினால் அல்லது கட்சிக்காரர் சார்பாக சொல்லப்பட்ட அல்லது எழுத்துமூலமாக வழங்கப்பட்ட அனைத்து தகவல்களையும் இரகசியமாக வைத்திருக்க வேண்டும்.*[27]
    - *அவ்வாறு தகவல்களை இரகசியமாக வைத்திருக்க வேண்டிய சட்டத்தரணியின் அத்தகைய கடமையானது அக்கட்சிக்காரருடனான அவரது தொழில்ரீதியான உறவு நிலைத்திருக்கும் வரையில் அல்ல, ஆனால், வரையறைகளின்றி, குறித்த சட்டத்தரணி அக்கட்சிக்காரருக்காக செயற்படுவதனை நிறுத்திய பின்னரும் மற்றும் குறித்த கட்சிக்காரர் இறந்த பின்னரும் கூட தொடர்ந்திருக்கும்.*[28]

---

[24] *இவ்வழிகாட்டல்கள் கீழ்வரும் மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டவை ஆகும்:* Willian Vogeler, 'Lawyer Tips: Do's and Don'ts of Speaking to Reporters', 30 May 2017, https://www.findlaw.com/legalblogs/strategist/lawyer-tips-dos-and-donts-of-speaking-to-reporters/; Nicola Kenyon, 'Dealing with the Press: What Lawyers Need to Know', 29 April 2020, https://www.lawyer-monthly.com/2020/04/dealing-with-the-press-what-lawyers-need-to-know/.

[25] *உச்ச நீதிமன்ற விதிகள் 1988 (சட்டத்தரணிகளுக்கான நடத்தை மற்றும் நெறிமுறை), விதி 18*

[26] ibid., *விதி 18 (அ).*

[27] ibid., *விதி 31*

[28] ibid., *விதி 33*

- ○ சட்டத்தரணிகளின் குழாமின் சுயாதீனத்தன்மையில் தலையீடு செய்யாமல் சட்டத்தரணிகள் பிரசன்னமாகின்ற நீதிமன்றம், நியாயசபை மற்றும் நீதியின் நிர்வாகத்திற்காகத் தாபிக்கப்பட்டுள்ள ஏனைய நிறுவனங்கள் நீதியினை முறையாக நிர்வகிப்பதற்கு உதவி செய்ய வேண்டிய கடப்பாடு சட்டத்தரணிகளுக்கு உண்டு.[29]
- ○ எதிர் தரப்பினரை அல்லது சாட்சியொருவரை அல்லது வேறு எவரேனும் நபரை அவமதிப்பதற்காக அல்லது இழிவுபடுத்துவதற்காக மாத்திரம் சட்டத்தரணிகள் எவ்வித அறிக்கைகளையும் வெளியிடக்கூடாது அல்லது கேள்விகள் கேட்கக்கூடாது.[30]

- நீதிமுறை நடவடிக்கையொன்றினை குந்தகப்படுத்தும்வகையில் எவ்வித அறிக்கைகளையும் செய்யக்கூடாது.[31]

[29] ibid., tpjp 50
[30] ibid., tpjp 53 (i).
[31] American Bar Association, Rule 3.6: Trial Publicity, at https://www.americanbar.org/groups/professional_responsibility/publications/model_rules_of_professional_conduct/rule_3_6_trial_publicity/.

## பின்னிணைப்பு 1

**தகவல்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்**

தகவல் அலுவலர்,

01. கோரிக்கையாளரின் பெயர் - ……………………………………………..
02. முகவரி – …………………………….
03. தொலைபேசி இல. (ஏதேனும் இருப்பின்) -………………………….
04. மின்னஞ்சல் முகவரி (ஏதேனும் இருப்பின்) - ………………..
05. கோரப்படும் தகவல்கள் பற்றிய விபரங்கள்
    I. குறித்த பகிரங்க அதிகாரசபை ……………………………….
    II. கோரப்படும் தகவல்கள்
    ……………………………………………………………………………………..
    ………………………………………………………………………………………………………………………………………
    ………………………………………………………………………………………………………………………………………
    ………………………………………………………………………………………………………………………………………
    III. தகவல் கோரப்படும் குறித்த காலப்பகுதி (பொருத்தமாயின்) ………………
06. தகவல் கோரப்படும் விதம்–
    i. சம்பந்தப்பட்ட வேலையை, ஆவணங்களை, பதிவுகளைப் பரிசோதித்தல்
    ii. ஆவணங்கள் அல்லது பதிவுகளிலிருந்து குறிப்பெழுதுதல், பிரித்தெடுத்தல் அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள்
    iii. பொருட்களின் சான்றுப்படுத்தப்பட்ட மாதிரிகளைப் பெறுதல்
    iv. அத்தகைய தகவல் ஒரு கணனியில் அல்லது ஏதேனும் வேறு சாதனத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பின், தகவலைப் பெறுவது ஊனு.'.னுஏனு/ஊடக களஞ்சியம் / பதிவு நாடாக்கள் / வீடியோ கெசற்றுகள் / ஏதேனும் வேறு இலத்திரனியல் வடிவம் /அச்சுப் பிரதிகள்
07. வேண்டுகோளை மேற்கொள்பவர் தகவலைப் பெற விரும்பும் மொழி -……………………….
08. கோரப்படும் தகவல் பிரஜை ஒருவரின் வாழ்க்கை அல்லது சொந்தச் சுதந்திரம் தொடர்பானதா? (ஆம்/இல்லை)
    ஆம் எனில், நம்பிக்கைக்கான காரணத்தைத் தருக. -
    ………………………………………………………………………………………………
    ………………………………………………………………………………………………………………………………………
09. வேறு ஏதேனும் விபரங்கள்- ………………………………………………….
10. சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன (ஏதேனும் இருப்பின்)
    I. ……………………………
    II. …………………………….
    III. …………………………….
11. கோரிக்கையாளர் ஓர் இலங்கைப் பிரஜையா? (ஆம்/இல்லை)

திகதி: -

ஒப்பம்:-